திராவிடநாடு

15—2—59 | வார வெளியீடு | விலை 16 காசு

ஆகாஷ்வாணியா?

—(கா. வேழவேந்தன்)—

மயிலுக்குத் தடையாம்! மந்திக்கு முதலிடமாம்!
குயில்கூவக் கூடாதாம்! கோட்டான் அலறிடுமாம்!
மான மெனும்பொருளை தானமிட்டோர் ஆட்சியிலே
தேனொழுகும் தமிழ்ச்சொல் வானொலி வழங்காதாம்!
சாகாத மொழியிருக்க சவக்குழியில் புழுத்திருக்கும்
ஆகாஷ வாணிவந்து ஆளுமாம்! ஐயயோ!
எதற்கும் தில்லியின்கை ஏந்திநின்று வாழ்பவரே!
பதருக்கும் கீழேபோய் பாதத்தைக் கழுவாதீர்!
குல்லாவைக் காட்டினான்; குனிந்தீர்கள்; தலைப்பாகை
எல்லோரும் நீக்கி எடுத்தணிந்து கொண்டீர்கள்!
கோதுமையை உண்ணென்று கூறினான்; அடுத்தநொடி
ஏதுமொரு பதிலின்றி ஏற்றீர்கள்! நாளையவன்
தன்நாட்டுப் பெண்டிரைப்போல் தமிழ்நாட்டுப் பெண்க-
தலைமேல் முக்காடிட்டுத் தரணியில் [ளெல்லாம்
உலவவேண்டும் என்றால் மறுப்பொன்றும்
சொல்லாமல் ஏற்பதற்கும் சொரணையற்றுப் போனீர்கள்!
இனியும் எதிர்காலம் இன்றுள்ள பாழ்நிலைபோல்
பனிமூடிக் கிடக்காது! பார்வையினைத் திருப்புங்கள்!
'ஆகாஷ வாணி'எனல் அவலம்! பேரவலம்!
ஆகாது 'வானொலி'யென் றுரைநொடியில் மாற்றிடுவீர்!!

நேருவின் வீரம்!

முல்லை-சத்தி

''தனியொருவனின் இலாபத்திற்காகப் பல்லாயிரக்கணக்கான மக்களின் நன்மைகளைப் பணயம் வைப்பதை எப்படியும் தடுத்தே நிறுத்துவோம்'' இந்தக் கற்கண்டு நிகர் சொற்களை உதிர்த்தவர், 'பாரத'த்தின் முடிசூடா மன்னர் எனப்போற்றப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார்! புதுடில்லியிலே, ஜனவரி 31-ந் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றிலே தான், நேரு, இந்த மணி யணியான வாசகங்களைத் தவழவிட்டிருக்கிறார்!!

பேசுவதிலே வல்லவர்; ஈடு இணையற்றவர் என்றெல்லாம் பாராட்டப்படுபவர் நேரு! உலகத் தலைவர்களிலேயே, அதிகமாகப் பேசுபவர் நேருதான் என்ற புகழ்மொழிகூட அவருக்கு உண்டு! எப்பொருள் குறித்தும் மணிக்கணக்கிலே மடை திறந்தது போல் வார்த்தைகளைக் கொட்டுவதில் கைதேர்ந்தவர் என்ற பெயர் அவருக்கு உண்டு! இது போல்தான், இந்த முத்துக் கோர்வையையும் சிந்தவிட்டிருக்கிறார், டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில்!!

பல்லாயிரக் கணக்கிலே மக்கள்; கண்பார்வை எட்டும்வரை ஜனத்திரள். இக்காட்சியைக் கண்டதும் நேரு அவர்களின் உள்ளத்திலே புதிய உற்சாகமும், தெம்பும் ஏற்பட்டதிலே வியப்பில்லை. அந்த வியப்பின் காரணமாக வெடித்துச் சிதறிய சொற்கள்தான் நாம் மேலே குறிப்பிடுள்ளவை!

''பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வை பணயம்வைத்து தனியொருவனின் வாழ்வை கொழுக்கச் செய்ய மாட்டோம்'' என்று அவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்! இந்தப் பொன்னான வாசகத்தைப் படிப்பவர்களுக்கு நமது கண்ணான நேரு, இந்த நாட்டிலே பல்லாயிரக் கணக்கானோரின் வாழ்வைப் பணயம் வைத்துக் கொழுக்கும் முதலாளித்துவத்திற்குச் சாவுமணி அடித்துவிட்டார் என்றுதான எண்ணத் தோன்றும்! ஆனால் கடந்த பத்தாண்டுகாலமாக நேரு அவர்கள் நடைபோட்டு வந்த பாதையை நாம் ஒருமுறை திரும்பிப் பார்ப்போமேயானால், நேரு உதிர்த்த முத்துக்களும், அவரின் நடவடிக்கைகளும் இரு துருவங்களாக காட்சியளிப்பதைக் காணலாம்!

மக்களைக் காணும்போது, அவர்களின் காதுகளுக்கு இனிமையாகவும், உள்ளத்தில் மகிழ்ச்சிக் கொப்பளிக்கவும் இத்தகைய தெப்பங்களை மிதக்க விடுவது நேருவின் வழக்கம். ஆனால் அதைச் செயலிலே கடைப்பிடிக்காமலிருப்பதும் அவரின் பழக்கம்.

*

''தனியொருவனின் இலாபத்திற்காக பல்லாயிரக்கணக்கான மக்களின் நன்மைகளை பணயம் வைப்பதை எப்படியும் தடுத்தே நிறுத்துவேன்'' எனக் கொக்கரிக்கிறார் நேரு! ஆனால் அவருக்கருகாமையில் இருபபவர்கள் யார்? அவரின் காங்கிரஸ் கட்சி அரியாசனம் ஏறப் படிகட்டுகளாக இருப்பவர்கள் யார்? இந்த நாட்டின் பெரும் புள்ளிகளான ஆலை அரசர்கள்! ஓலை வேய்ந்த குடிசையிலே சாவோடு போராடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானோரின இரத்தத்தை உறிஞ்சி உன்னதமான மாளிகைகளை அமைத்துக்கொண்டிருக்கும் முதலாளிக் கும்பலின் உதவிகொண்டுதானே இன்று நேருவும் அவரது சிஷ்ய கோடிகளும் அரசாங்க லகானைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு வெள்ளிக் காசுகளை அள்ளி, அள்ளித் தந்த வள்ளல்கள் யார்? இன்று சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருப்பவர்கள் யார்? ஆலை அரசர்களும், மோட்டார் மன்னர்களும், பெரும் நிலச்சுவான்தாரர்களும் தானே?

ஏழை எளியவர்களின் உதிரத்தில் நீந்தும் முதலாளிகளின் கைப்பாவையாக இருக்கும் நேருதான் கூறுகிறார், தனியொருவனின் இலாபத்திற்காக பல்லாயிரக் கணக்கான மக்களின் நன்மைகளைப் பணயம் வைப்பதை எப்படியும் தடுத்தே நிறுத்துவோம்' என்று! அப்படியென்றால் இந்த நாட்டில் தனிப்பட்ட முதலாளிகள் எல்லாம் மூலைக்குத் துரத்தப்பட்டு விட்டார்களா? தனிப்பட்ட முதலாளிகளின் கொட்டம் அடக்கப்பட்டதா? இந்தப் பத்தாண்டுகால ஆட்சியில் நாம் கண்டதென்ன? நாளுக்கு நாள் முதலாளிகளின் செல்வாக்கு வளர்கிறது காங்கிரஸ் ஆட்சியில், பெரும் பெரும் முதலாளிகளெல்லாம் கதராடை அணிந்து சட்ட சபையிலும், பாராளுமன்றத்திலும் பவனி வருகின்றனர்!!

*

'வேலைக்கேற்ற ஊதியம் — தேவைக்கேற்ற வசதி' என உரிமை முழக்கமிடும் பாட்டாளிகளுக்கு நேரு துரைத்தனம் தந்த பரிசென்ன? அவர்கள் விழிநீரைத் துடைப்பதற்குப் பதிலாக, துப்பாக்கிக் குண்டுகளைத்தான் தந்தார்கள்! இந்தப் பத்தாண்டு

(16-ம் பக்கம் பார்க்க)

வளரும் நாம்

மலர் 17] ஆண்டுச் சந்தா ரூ. 5 [15-2-59] தனிப் பிரதி 10-காசு [இதழ் 31

உன்னிடமுள்ள 'சொத்து' எது என்று ஏழையைக் கேட்டால், தன் கைகால்களைக் காட்டுவான்! அவனிடம், அவைகளைத் தவிர வேறென்ன இருக்கிறது!! சீமான்கள் காட்டலாம், மிராசையும், பங்களாவையும், பளபளப்பான கார்களையும். ஏழை எங்கே போவான்? காங்கிரஸ் கட்சி, இன்று சீமான்கள் நிலையிலே இருக்கிறது. அவர்களுக்குக் காட்டிக் கொள்ள ஏடுகளும், நேருவும், வெளிநாட்டினர் நட்பும், ஆட்சியாசனமும், வசதிகளும் ஏராளம் உண்டு. அவைகளால், அந்தக் கட்சிக்கும் அதனைச் சார்ந்தோருக்கும் சுவை கிடைக்கிறதே ஒழிய, நாடு காணும் பலன் ஏதுமில்லை. குறிப்பாகத் தென்னாடு, காங்கிரஸ் அரசால், கண்டிடும் பயன் ஏதுமில்லை. இந்த நாட்டுக்கும், நாட்டில் வாழும் மக்களுக்கும், வாழ்வு பெறவேண்டிய கடமை, ஏழைகளான நமக்குத் தானிருக்கிறது. நம்மிடம், வாகனங்களில்லை, மாதா மாதம் நன்கொடைகள் அனுப்பும் சீமான்களில்லை, பெரிய பெரிய ஏடுகள் இல்லை; என்றாலும், அருமையானதொரு ஜனநாயக அமைப்பும், குடும்பப் பாசமும் இருக்கிறது! ஒரு விடுதலை இயக்கத்துக்கு இந்த இரண்டும்தான் முக்கியமாகும். இந்திய உபகண்டத்திலேயே, ஏன் உலகத்திலுள்ள விடுதலை இயக்கங்களிலேயே இந்த இரண்டோடும் 'கண்ணியம்' எனும் மூன்றாவது சொத்தையும் பெற்றிருக்கும் இயக்கம், நம்முடைய தி. மு. கழகமும்!!

பிறந்தபோது, தந்தை சபித்தார் — இன்று அவர், நம் வளர்ச்சி கண்டு உள்ளுக்குள்ளாவது மகிழும் வகையிலாவது வளர்ந்திருக்கிறோமேயன்றி— குலைந்துவிடவில்லை! ஆசாபாசங்களிலும், வீண் நடவடிக்கைகளிலும், ஈடுபட்டுக் காலத்தையும் கருத்தையும் விரயம் செய்து, பெரியோர்கள் விட்டுப்போன 'தென்னிந்திய நல உரிமை' என்பதனைக் காற்றிலே பறக்கவிட்டுவிடவில்லை! தேர்தல் வந்தாலும் சரி, சட்டசபைக்குள் போனாலும் சரி, அமைச்சர்களின் புன்சிரிப்புக் கிட்டினாலும் சரி, அயலார் தம் நேசம் வந்தாலும் சரி, அவையாவையும் நமது விடுதலைக்கு எருவாக்க முனைந்து வருகிறோமேயன்றி; இழுப்பார் இழுத்த பக்கமெலாம் போய், இலட்சியத்தை மோதவில்லை!! இந்த இதய சுத்தமும், கடமைப் பாங்கும், இந்த நாட்டின் நாலுபக்கங்களிலுமுள்ள ஒவ்வொரு ஊர்க் கிளைகளிலும் காண்கிறோம்.

இயக்கத்தில் உழைக்கும் ஒவ்வொரு தோழருக்கும் குடும்பங்களும்; கவலைகளும் உண்டு; எல்லோருமே கானம்பாடும் வானம்பாடிகளல்ல; விநாடிக்கு விநாடி 'தேவை'யெனும் தேள் கொட்டப்படும் நிலையிலே இருப்பவர்கள்தான். அவைகளோடுகூட இலட்சியத்தையும் வளர்க்க, எல்லாவிதத் தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்கிறார்கள்! அண்மையில் காங்கிரசுத் தலைவியான திருமதி இந்திராதேவியைப்பற்றி ரசமான குறிப்பு வெளியிட்டிருந்தார்கள் — ஆரம்பப் படிப்பு இலண்டனில், அடுத்த படிப்பு ஸ்விட்சர்லாந்தில், என்பதாக. அது போன்ற வாய்ப்புகளும், வசதிகளும் பெற்ற பண்டித நேருவின் குடும்பங்கள், நம்மிடம் கிடையாது. நேரு ஒருவர் மட்டுமல்ல, ஆரம்பகாலத்தில் காங்கிரசுக்குக் கிடைத்த பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் ஏழை தாளுக்கள் அல்ல; சமுகத்திலும், வாழ்க்கையிலும் சலனமற்ற ஒரு இடத்தைப் பெற்றிருந்தவர்கள்! நமக்கு அப்படியல்ல, அண்ணன் தம்பி என்கிற பாசமும், எம் கழகத்தோழர் எனும்போது உண்டாகிற உள்ளத் தொடர்பும் தவிர, வேறெதையும் சொத்தாகப் பெற்றோமில்லை. வரும் தோழருக்கு 'காப்பி' வாங்கித் தருமளவுக்கு வசதி பெற்றோர் தொகை விரல்விட்டு எண்ணுமளவுக்குத்தான் இருக்கும்! செய்ய ஆர்வமிருந்திடினும், 'பைமைத் தடவி'ப் பெருமூச்சுவிடும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் உண்டு நம் கழகத்தில்!! அவர்களையெல்லாம் ஒன்றுக்கித் தருவது, எது? காசா? அல்ல. சமுக உயர்வா! அல்ல. பிறகு, எது? அடுக்கு மொழி என்பார்கள், அமைச்சர்கள்! அல்ல, அல்ல. நாம் கொண்டிருக்கும் கொள்கையும், அந்தக் கொள்கையைச் சாதிக்கக் கொண்டிருக்கிற அமைப்பும், அந்த அமைப்புக்குள்ளே மலர்ந்திருக்கும் குடும்பப் பாசமும்தான், நம்மை எஃகுக் கோட்டையாக்கி வருகிறது.

அமைச்சர்கள் திட்டாத நாளில்லை! 'தந்தை' ஏசாத சமயமில்லை! அழியமாட்டார்களா என்று ஏங்காத சனாதனிகள் கிடையாது! தி.மு.க-பக்கம் போனாலே சீட்டைக் கிழித்துவிடுவேன் என்று மிரட்டும் பிரபுக்கள் உண்டு! அரசும் அடிக்கடி அதட்டுகிறது! இங்கேவந்தால் எந்தச் சமயம் சிறைக்குச் செல்லவேண்டுமோ, எந்தநேரம் குண்டடி படுமோ, என்கிற நிலைதான். என்றாலும், கழகம் வளர்கிறது, கடமையாற்றுகிறது என்றால், உண்மையிலேயே அது ஒரு சாதாரணமான காரியமல்ல.

கலந்து பேசும்போதும், முடிவுகள் எடுக்கும் போதும், ஆர்வத்துக்கு அணைபோடும்போதும், சட்டதிட்டத்துக்குள் அடங்கச் சொல்லும்போதும், ஒரு ஜனநாயக அமைப்புக்குள் சலசலப்புத் தோன்றவே செய்யும். ஒருவர், இருவராகிவிட்டாலே, அங்கே கருத்தலைகள் எழுமன்றோ? ஒவ்வொருவருக்கும், அவரவர் கருத்துச் சரியென்றேபடும்! அந்தக் கருத்தலைகளை விவாதித்து, முடிவு எடுக்கும்போது, முணுமுணுப்புகளும் வரும். அந்தக் காட்சிகளையும், தாண்டி, தி.மு.க-இருக்கிறது எனும்போதுதான் நம்முடைய குடும்பப் பாசத்தின் அளவும் வலிவும் தெரிகிறது!! இந்தப் பாசத்தினைப் பெறவும், வாலிபர்தம் உள்ளமெல்லாம் புகவும், வலிமை மிக்கதோர் இயக்கமாக உருவெடுக்கவும், நாம் தாண்டி வந்திருக்கிற ஆண்டுகள் கொஞ்சம்; செய்திருக்கிற தியாகங்களோ, கொஞ்சமுமல்ல, குறைகூறக் கூடியதுமல்ல!!

ஒரு தாய், அந்தக் குடும்பத்திலுள்ள மருமகள், பிள்ளைகள், எல்லோருமே நம்முடைய இயக்கத்தவர். ஒரே ஒரு பிள்ளை மட்டும், நமது 'பழைய' இடத்திலிருந்தது, பிறகு கம்யூனிஸ்டாகியது, இப்போது அக்கட்சியின் சார்பில் முனிசிபல் தேர்தலுக்கும் போட்டிபோடத் தன்னைத் தயார் செய்துகொண்டு, தாயிடம் போய் 'அம்மா! நான் தேர்தலிலே நின்றால் யாருக்கு நம்முடைய ஓட்டுகள்?', என்று கேட்டதற்கு, அத்தாய் சொன்னாராம், "மகனே! உன் கொள்கை வேறு; என் கொள்கை வேறு; இன்றில்லாவிடினும் ஒரு நாளைக்கு என் கொள்கைக்கு வந்துவிடுவாய் என்கிற உறுதி எனக்குண்டு. அந்த உறுதியிலிருக்கும் என்னை வந்து இப்படிக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்! என்பது உனக்குத் தெரியாதா," என்று? மகன், பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டாராம், பதிலேதும் பேசாமல்!! இப்படியுள்ள குடும்பங்கள், ஏராளம், நம்நாட்டில். ஒரு குடும்பத்துக்குள்ளேயே, பலவித கருத்துக்கள் கொண்டோர் இருப்பதைப்போலத்தான், தெருக்களும், ஊர்களும், வட்டங்களும், உள்ளன. இந்தத் தாயைப்போன்று, சகிக்கும் குணமும், உள்ள உறுதியும், அனைவரும் ஒரு நாளைக்கு நம் பக்கம் வரவேண்டியவர்கள்தானே என்கிற விரிந்த சிந்தையும் அவசியம் இருந்தாக வேண்டும். வேண்டியவர்களுக்காக, கொள்கையை இழக்காத மாணிக்கங்களையும், மரகதங்களையும், இன்றைய தினம் தி.மு.க. பெற்றிருக்கிறது! அந்த உறுதியோடு, மாற்றார் மீது வெறுப்பில்லாத பாசமும், நமக்கு இருக்கவேண்டும்!! பாசத்துக்காகக் கொள்கையையும், கொள்கைக்காகப் பாசத்தையும், இழந்துவிடவேண்டும் என்பதல்ல. குடும்பப்பாசக் கண்ணோட்டம், மாற்றார் மீதும், தேசிய இயக்கத்தாராகிய நமக்கு இருந்தாகவேண்டும். ஏனிதைக் குறிப்பிடுகிறோம் எனில், இப்போது நாடெங்கும், நகராட்சி மன்றத் தேர்தல் ஒலி கிளம்பியிருக்கிறது! கட்சியின் சார்பில் காங்கிரஸ் போட்டியிட முடிவு செய்ததையொட்டி, தி.மு.க.வும், பல இடங்களில் போட்டியிடுகிறது!!

இந்தப் போட்டியினை, கலாம் விளைவிக்கவும், முலாம்பூசி மாற்றவும், முனையக்கூடும் சமயசஞ்சீவிகள். எந்தத் தேர்தல்களையும், ஜனநாயக முறைக்கு நாம் ஆற்றிடும் தொண்டு என்றே கருதவேண்டும். தோல்விகள் வரின், அவை நமக்குப் பாடங்களாகும்! வெற்றிகள் ஏற்படின், கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பங்களாகும்!! பொதுவாக, இதுபோன்ற தேர்தல்களிலே, பணநாதன் பவனியும், சாதிப்பேச்சும் அடிபடும். விலகியிருந்து, நமது சக்தியினை அறிதலில் இருக்கும் ஆனந்தத்தின் அளவுக்கு ஈடு இணை கிடையாது; எதிர்ப்பாரின்றி வாழலாம் என்று நினைக்கும் சீமான்களுக்கும், அவர்களை நம்பிவாழும் காங்கிரஸ் கட்சிக்கும், "நாம்" இருக்கிறோம், கடிவாளம் போடாமல் விட்டுவிடமாட்டோம் என்பதைக் காட்டவே, இந்த நகராட்சி மன்றத் தேர்தல். இந்த ஜனநாயகக் கடமையை உள்ளத் தூய்மையோடும், பாச உணர்ச்சியோடும், ஆற்றும்படி நமது தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்! நாமெல்லாம் ஏழைகள்—ஏழைகளைச் சாய்க்க, மாற்றாரிடமிருக்கும் வசதிகள் பல—அவைகளையும் தாண்டி ஒரு இயக்கத்தை வளர்த்து வருகிறோம்—அதற்கு, நாள்தோறும் நம்மாலான புகழையும் சிறப்பையும் சேர்த்திட வேண்டும் என்பதிலேயே நாம் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்!!

★

பாதி வழியில்.....!

"நமது அரசியலமைப்பு, மாநில சட்டமன்றங்களின் அதிகாரங்களை, அதுவும், பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில், மிகமிகக் குறைத்து விட்டிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த நிலை, கூட்டாட்சி தத்துவத்திற்கு ஒவ்வாதது மட்டுமல்ல, பாராளுமன்ற முறைக்கே ஊறுதேட வல்லது. நாட்டு நலனுக்கேற்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநிலங்களின் பொறுப்பு மேலும் மேலும் வளர்ந்து வருவதையும்' பொறுப்பு வளர வளர, அரசியல் சட்டம் மாநிலங்களுக்கு வகுத்திருக்கும் எல்லைக் கோட்டை, அவைகள் அடிக்கடிமீறுவதையும், நாம் காண்கிறோம். இந்தப் பிரச்சினை சாதாரணமானதல்ல! இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திட வேண்டுமானால், இதற்கோர் முடிவு கண்டாகவேண்டும்."

—இத்தகையதோர் கருத்து, நாம் சற்றும் எதிர்பாராத இடத்திலேயிருந்து வந்திருக்கிறது என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே நம் உள்ளத்திலெல்லாம் மகிழ்ச்சி பிறக்கிறது.

இதே கருத்தினை, நானோ, நாவலர் நெடுஞ்செழியனோ-சம்பத்தோ கருணாநிதியோ — அன்பழகனோ மதியழகனோ-நடராஜனோ, மற்றும் பல கழகத் தோழர்களில் வேறெவரோ கூறியிருந்தால், அதிலே வியப்பதற்கொன்றுமில்லை —நாள் தோறும் நடைபெறுகின்ற நிகழ்ச்சி.

மத்திய அரசு மாநிலங்களை ஆட்டிப் படைக்கிறது — சூத்திரதாரிகள் டில்லியில்; சொகுசாக உலா வருகின்ற கொலுப்பொம்மைகள் இங்கே—என்று நாம் தினம்தினம் தான் சொல்லுகிறோம், ஆணித்திறமான ஆதாரங்களோடு!

இந்த அவல நிலையினை, ஆகாத முறையினை, அகற்றிட நாடு நமதாகவேண்டும், நமது நாடாம் திராவிடத்தின் ஆட்சி நம் கரத்திலே ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று வழிவகைகளையும், எடுத்துக் கூறுகிறோம், எதிர்ப்புகளையும் ஏளனங்களையும் பொருட்படுத்தாமல், எதையும் தாங்கிடும் இதயத்தினராக.

மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் போதாது-மத்திய அரசின் ஆணைக்கு அவை கட்டுப்பட்டு நடந்திடும் போக்கு

சி. என். ஏ.

ஆகாது. — இதற்கோர் மாற்றம் எம் முறையிலேனும் கண்டாக வேண்டும்—என்று நமது கழகத்தவர் எவரும் பேசுவதிலே வியப்பில்லை.

ஆனால் நாமெல்லாம் வியக்கத்தக்க வகையில் இந்தக் கருத்தினை வெளியிட்டிருப்பவர், ஒரு கம்யூனிஸ்டுத் தோழர் — வங்கத்தைச் சேர்ந்தவர் — பூபேஷ் குப்தா என்பார்!!

நாம் நாள்தோறும், செல்லுமிடமெல்லாம் சொல்லிவருகின்றகருத்துக்கு, செஞ்சட்டை முகாமிலிருந்தே இத்தகையதோர் ஆதரவு கிடைத்திடுவது கண்டு நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படாமலிருக்க முடியாது.

காரணம், அவர்கள் தமது கருத்திற்கு மாறான எந்தக் கருத்தினையும் ஏற்றுப் பழக்கப்படாதவர்கள் —எதையும் எளிதில் 'பிற்போக்கு வாதம்' என்று பெயரிட்டுவிட்டு ஒதுக்கித் தள்ளிவிடுகின்ற சுபாவத்தினர்!!

இதே கருத்தினைத்தான் இன்னும் ஒருபடி சென்று, திராவிட முன்னேற்றக் கழகம் "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற கோரிக்கையின் மூலம் நாட்டு மக்கள் முன்னிலையில் வைத்து வருகின்றது.

அதை, கம்யூனிஸ்டுக்கட்சியினர் அறியாதவரல்லர்; ஆனாலும் என்ன செய்தார்கள்?

ஆகா! நீங்கள் சொல்லுவது தான சரி, இதோ நாங்களும் வருகின்றோம், நல்லதோர் காரணத்திற்காக, நியாயம் பெறுவதன் பொருட்டுப் போராடுக என்று கூறினார்கள்?

திராவிடமாம், பிரிவினையாம். வடக்காம் தெற்காம், இவர்களுக்கென்ன புத்தி பேதலிப்பா என்று கேலி பேசினார்கள்! பாரதம் ஒன்றன்றோ, பாவிகளே, அதைத் துண்டாட நினைக்கின்றீரே, இது ஆகுமா, அடுக்குமா, என்று சென்றவிடமெல்லாம் நம்மைச் சாடினார்கள்!!

சாடியதோடு மட்டுமா! இந்தச் சண்டாளர்களை ஒழித்துக்கட்டி விடுகிறோம் என்று தீர்மானமே நிறைவேற்றினார்கள், அமிர்தசரஸ் மாநாட்டில்.

அந்த அளவுக்கு நம்மைச் சாடிய கூடாரத்திலே இருக்கின்ற ஒருவர், இந்த அளவுக்கு மன

நெருங்கி வந்திருக்கிறுரே என்பதை எண்ணும்போது நம்மை மறியாமலே நமக்கு மகிழ்ச்சி பிறக்கிறது.

இந்த 'ஞானேதயம்' அவர்களுக்குத் திடீரென்று ஏற்பட்டதல்ல! கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிப் பீடத்திலே அமர்த்தப்பட்ட நாள் முதல், மத்திய அரசு எந்த அளவு வலிவோடு திகழ்கிறது என்பதனையும், மாநிலங்கள் எந்த அளவு வலுவற்று, எதற்கும் டில்லியின் கட்டளையை எதிர்பார்க்கவேண்டிய ஏளனமான நிலை இருந்து வருகின்றது என்பதனையும் அவர்கள் மெள்ள மெள்ள உணர்ந்து வருகின்றனர்.

கேரளத்து முதலமைச்சர் எதையெதையோ செய்ய நினைக்கிறுர்—பற்பல சாதனைகளைப் புரிந்திட எண்ணுகிறுர் — எத்தனிக்கிறுர்—ஆனல் முடிவில் அவருக்குப் புரிகிறது, அவரது கரங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன என்பது!

ஆட்சிப்பீடம் ஏறிய நாள்முதல் அவர் பெற்றிருக்கின்ற அனுபவங்கள் மிகப்பல — அந்த அனுபவங்கள் நல்லபல படிப்பினைகளை அவருக்குத் தந்திருக்க வேண்டும் --அந்தப் படிப்பினைகளின் விளைவுதான் தோழர் பூபேஷ் குப்தாவின் கருத்துப்படையல்.

இந்த உண்மையினைக் கண்டுபிடிக்க கம்யூனிஸ்டுகளுக்கு, இவ்வளவு நாள் ஆகியிருக்க வேண்டியதில்லை — அரசியலமைப்பைப் பற்றிக் கருத்தறிவித்திருக்கின்ற அத்தனை பேரும் ஒருமுகமாக இதனை எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

ஆனாலும் இப்போதாவது அவர்கள் உணர்ந்தார்களே; குப்தா போன்றவர்கள் அதை வெளிப்படையாக விளக்கிடவும் துணிந்தனரே, என்று நாம் மகிழ்கின்றேம். மகிழ்ந்திடும்போது மற்றேர் உண்மையையும் நாம் மறந்துவிடக்கூடாது. மாநிலங்களுக்குப் போதிய அதிகாரங்கள் தரப்படவில்லை என்று தமது கட்சி ஏட்டிலே தீட்டிக் காட்டிவிட்டதாலே தோழர் குப்தாவோ, அவர்தம் கட்சியோ நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தருகிறது என்று பொருளல்ல — அவர்கள் இன்னமும் 'அகில இந்தியா'க்கள் தான்!

அவரோ, அவர் சார்ந்திருக்கின்ற கம்யூனிஸ்டுக் கட்சியோ 'சிறு மீன்களை'...விரும்புவதில்லை, 'உறுமீன்' வருமளவும் வாடியிருக்கச் சித்தமாயிருப்பவர்கள்!

ஆனாலும் நமக்கு, நியாயமான தோர் ஐயப்பாடு எழுகின்றது.

பாரதம் ஒன்றுதான் என்பதிலே அவர்களுக்கு உண்மை நம்பிக்கை இருக்குமானல், மத்திய அரசுக்கு எவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால்தான் என்ன என்று பேசாமலல்லவா இருந்துவிடவேண்டும்? அதிகாரங்கள் அங்கே குவிக்கப்படுவதா என்று முணுமுணுப்பதிலே பொருளென்ன? பாரதம் ஒன்றுதான் என்று ஏற்றுக்கொண்டான பிறகு, பகுதிகளைப்பற்றிக் கவலைப்படுவானேன்? அவற்றின் அதிகாரங்கள் அளவுக்குமீறிக் குறைக்கப்பட்டுவிட்டன என்று கூரலெழுப்புவானேன்? பாரதம் ஒன்றென்று ஏற்றுக்கொண்டால் மாநிலங்கள் வெறும் ஆட்சிச் சௌகரியத்திற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற பற்பல பகுதிகள் என்றுதானே கொண்டாக வேண்டும்!

நாட்டின் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு மாநிலங்களுக்கு இருப்பதாலே, அவற்றிற்கு இன்னும் அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் வாதிடுவார்களானல், அந்தத் திட்டங்களை மத்திய அரசாங்கமே நிறைவேற்றிவிடலாமே, மாநில அரசுகளுக்கு அந்தப் பொறுப்புகள் ஏன், என்றெரு கேள்வி எழுப்பப்பட்டால் என்ன பதில் சொல்வார்கள்? மத்திய அரசாங்கத்திற்கு 'ஏஜண்டு'களாக மாநில அரசாங்கங்கள் இயங்குகின்றன என்று அவர்கள் வாதிட்டால், அத்தகைய ஏஜண்டுமுறை ஏன் என்று கேட்கப்படக்கூடுமல்லவா? திட்டங்கள் நிறைவேற்றப்படுவது தான் முக்கியமே தவிர, அவற்றை நிறைவேற்றுவதற்காக ஏஜண்டுகளை நியமிப்பதோ, அந்த ஏஜண்டுகளுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று ஆராய்வதோ அல்லவே!

இதுபோன்ற கேள்விகள் எழுப்பப்பட்டால், கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு வேலை அதிகமாகிவிடும்— அவர்கள் தங்கள் இதயத்திலே இருக்கின்ற உண்மையை ஒளிவு மறைவின்றிச் சொல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்—அதனையும் மறைத்திட முடியாது!

அந்தச் சூழ்நிலையில் அவர்கள் இந்தத் துணைக்கண்டத்து வரலாறு முழுவதையும் — இன்று மாநிலங்களாக இருக்கின்ற பல் வேறுபட்ட பகுதிகளின் வரலாறு என்ன, அவை எந்தெந்த விதங்களில் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை, எந்தெந்தக் காலமுதல் டில்லியோடு தொடர்புகொண்டவை, என்ற உண்மைகள் உட்பட — மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்!

அங்ஙனம் எடுத்துச் சொல்லும்போது, அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இன்னமும் நெருங்கி வந்துவிடுவார்கள் — அது கூறிவருகின்ற கருத்தையே கூறவேண்டிய நிர்ப்பந்தத்திலே தள்ளப்படுவார்கள்!

எனவேதான், சாதுர்யமாக, குப்தா அவர்கள் அந்தப் பக்கமே திரும்பிப்பார்க்கவில்லை! மிகவும் எச்சரிக்கையோடு குறைபாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறுர், நிலைமை விளக்கம் தந்திருக்கிறுர் — ஆனல் அந்த நிலைமையினைச் சீர்படுத்துவதற்கான வழிவகைகள் இவையிவை என்று ஆராய முற்படவில்லை — அந்த மகத்தான பொறுப்பை மக்களுக்கே விட்டுவிட்டு, மெள்ள நழுவி விட்டார்!

மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்பதுமட்டுமல்ல, இந்தத் துணைக்கண்டத்து அரசியலமைப்

> வாழ வசதியில்லாமல் பாடுபடும் மனிதனுக்கு, இந்த உலகத்தின்மீது வெறுப்போ பொருளாதாரப் புரட்சி எண்ணமோ ஏற்படாமல், இந்த வாழ்க்கையில் ஒரு திருப்தியும் மோகமும் இருக்கிறதென்றுல், அது குடும்பத்தின் மீதுள்ள ஆசை ஒன்றினுல்தான். அதனுல்தான் ஏழைகளின் குடும்பங்களுக்கு அதிகம் குழந்தைகள் பிறக்கின்றன.

யில் அவர் காணுகின்ற குறைபாடு — இதோ மற்றொன்றையும் சுட்டிக்காட்டுகிறார்:-

"இந்திய அரசியலமைப்பு ஜனநாயக அமைப்புக்களுக்குப் பலதடைகளை ஏற்படுத்தியிருக்கிறது. வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை தரப்பட்டாலும், கட்சிகள் பெறுகின்ற வாக்குகளுக்கேற்ப, அவை சட்ட மன்றங்களிலே அங்கம் வகித்திட முடிவதில்லை; காரணம், தேர்தல் முறையில் இருக்கின்ற கோளாறுதான்."

இந்த உண்மையினைத் திராவிட முன்னேற்றக் கழகமும் உணர்ந்திருக்கிறது. கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு பெற்ற வாக்குகளில் மூன்றில் ஒருபங்கு வாக்குகளைப் பெற்றிருந்தும், சட்டமன்றத்தில் அது பெற்றிருக்கிற இடங்கள் 15—ஆனால் காங்கிரசுக்கட்சி பெற்றிருப்பதோ 150!

எனவே, குப்தா குறிப்பிடுகின்ற குறைபாடுகளனைத்தையும் நாம் உணருகிறோம் — அவை களையப்படவேண்டியவைதான் என்பதையும் ஒப்புக்கொள்ளுகின்றோம்.

அதே சமயத்தில் நம் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுகின்றது "அவற்றைக் களைந்திடும் மார்க்கம் என்ன?" என்று!

அந்தக் கேள்வி எழுவதன் பயனாக, குப்தா காட்டுகின்ற வழி என்ன என்று துருவித் துருவிப் பார்க்கிறோம், முடிவில் ஏமாறுகிறோம்—காரணம், அவர் உருப்படியாக எந்த வழியையும் காட்டவில்லை. பிரச்சினைகளை அலசிக் காட்டியதோடு நின்றுவிட்டார்.

குறைபாடுகளை எடுத்துக் கூறியவர் அவற்றினைக் களைந்திடுவதற்கான வழிவகைகள் பற்பலவற்றை எடுத்துக்காட்டி, அவற்றிலே இவையிவை, இன்னின்ன வகைகளிலே ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதவை; இவையிவை நன்மை பயக்காதவை; இவையிவை ஜனநாயகத்திற்கு ஒவ்வாதவை, என்று வாதாடிவிட்டு, முடிவிலே ஒரு வழியினைக் காட்டி, இதுதான் சிறந்தது என்று கூறியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்!

ஆனால் அவர், தனது மனதுக்குத் தோன்றிய ஒரு பாதையைக் காட்டி, நாட்டிலே உள்ள கட்சிகளனைத்தையும் அந்தப் பாதையிலே வருமாறு வேண்டுகோள் விடுக்கிறார். இதோ அவர் வகுத்துத் தரும் பாதை:-

"இந்தப் பிரச்சினை கட்சி வேறுபாடுகளைக் கடந்தது—ஆனாலும் நாட்டுப் பற்றும் ஜனநாயகத்திலே நம்பிக்கையும் கொண்ட சக்திகளனைத்தையும் ஒன்று சேர்த்திடவல்லது. போராட்டம் நிகழ்த்தப்படவேண்டும், சட்ட மன்றங்களுக்கு உள்ளேயும் வெளியேயும்!"

இது குறைபாடுகளைக் களைவதற்கான திட்டமா, அல்லது கம்யூனிஸ்டுகள் ஒட்டு வேட்டைக்காகச் செய்யவிரும்புகின்ற தகிடுதத்தமா?

"மகாஜனங்களே! இந்த நாட்டில் இத்தனை எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. இவையெதுவும் கண்டுபிடிக்காத ஒன்றை நாங்கள் கண்டுபிடித்தோம்— அவர்களால் சாதிக்கமுடியாததை நாங்கள் சாதித்தோம்! நாங்கள் துவங்கவில்லையென்றால், இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்க முடியுமா?" என்று பேசித் தேர்தல் காலத்தில் இலாபம் பெறக் கம்யூனிஸ்டுகளுக்கு, இந்தத் திட்டம் பயனளிக்கக் கூடுமே தவிர, உண்மையில், இருக்கின்ற குறைபாடுகளைப் போக்க எப்படி முடியும், இந்தப் போராட்டத்தின் மூலம்?

குப்தா எடுத்துக் காட்டியிருக்கின்ற குற்றச்சாட்டுகள் களையப்படவேண்டுமானால், அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்!

அரசியல் சட்டத்தைத் திருத்துவதென்பது சாதாரண விஷயமல்ல—ஆளும் கட்சியின் ஆதரவு இல்லையென்றால் அது எப்படிச் சாத்தியமாகும்?

ஆளும் கட்சியின் ஆதரவு இடைக்கவில்லையென்றால் என்ன செய்வது?

"பெரியதோர் போராட்டம், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து!!"

மிகப் பரந்த மனப்பான்மையோடுதான் திட்டம் தருகிறார், எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர வேண்டுமென்று! பாவம், அந்தக் கட்சிகளுக்கிடையே இருக்கின்ற பற்பல சிக்கல்களையும், போராட்டங்களையும், மனமாச்சரியங்களையும் மறந்துவிட்டார்!

அப்படியே கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தி வெற்றி காண்பதாகவே வைத்துக் கொள்வோம்.

அரசியல் சட்டமும் திருத்தப்படுகிறது என்றும் ஒப்புக்கொள்வோம். அப்போது சேர்க்கப்படப் போகிற திருத்தங்கள் என்னென்ன?

மாநிலங்களுக்கு இப்போது இருக்கின்ற அதிகார வரம்பினை ஓரளவு விரிவுபடுத்துவதாலேயே பிரச்சினை தீர்ந்துவிடாதே!

விரும்பினால் பிரிந்துபோகின்ற உரிமை மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டாலொழிய, மத்திய அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்தக் கூடிய பயனுள்ள ஆயுதம் வேறென்ன?

அந்த ஆயுதத்தை மாநிலங்களின் கரத்திலே கொடுத்துவிடக் குப்தா ஒப்புக்கொள்ளுகிறாரா?

அவரைப் பொறுத்தவரை இந்தப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது, காடு முரடானது மட்டுமல்ல, மிகவும் பயங்கரமானதும் கூட. ஆனாலும் என்ன செய்ய? 'பாதிவழி' வந்துவிட்டார்! இனித் தயங்கிப் பலனென்ன, போய்ச் சேரவேண்டிய இடத்தை நோக்கி விரைந்து செல்வதைத் தவிர!!

எதிர்பாருங்கள்!

தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள்

அளிக்கும்

"காதல் பரிசு"

என்ற தொடர் கதை விரைவில் இடம்பெறும்.

வடக்கும் தெற்கும்!

குடியரசு விழா மலரிலே "இல்லஸ்ட்ரேடட் வீக்லி" என்ற பம்பாய் பத்திரிக்கையில் டாக்டர் யு. ஆர். எஃரென்பெல்ஸ் என்பவர் "வடக்கும் தெற்கும்" என்ற அற்புதமான கட்டுரை ஒன்றை, ஆணித்திறமான, அசைக்க முடியாத ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

'வடக்கு—தெற்கு' என்று எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருக்காதீர்கள்! முன்பே இருக்கும் வெறுப்பைத்தான் இது வளர்க்க உதவுமென்று அரசியல் வாதிகள் நம்மிடையே கூறுகிறார்கள்! நன்னம்பிக்கைகொண்டயாரும் விரோதத்தையும் வெறுப்பையும் வளர்க்க விரும்பவில்லை! ஆனால் நாம் உண்மைகளைக் காணாமல் கண்களை இறுக மூடிக்கொள்ளத்தான் வேண்டுமா? என்று தன் கட்டுரையை அழகாக ஆரம்பித்து "வடக்கு தெற்கு வாதம் இந்தியாவில் மட்டும் இருப்பதாக எண்ண வேண்டாம்! அது உலகெங்கணும் பரவியிருக்கிறது!" என்பதை ஆதாரங்களோடு அவர் விளக்குகிறார்.

வேண்டுமானால் சிலர் நினைக்கலாம், வியக்கலாம் எப்படியய்யா இரு இந்தியாவுக்கும் (வட இந்தியா—தென்னிந்தியா) இவ்வளவு முரண்பாடு தோன்றின என்று!

என்ன செய்வது! பூகோளமே அந்த முரண்பாடுகளை எந்த ஏகாதிபத்யவாதியாலும் அழிக்க முடியாத விதத்திலே இந்த மண்ணிலே செதுக்கிவைத்திருக்கிறதே!

இந்த முரண்பாடுகள் இந்த உபகண்டத்திலே மட்டுமல்ல; தெற்கு வடக்காக நீண்டிருக்கும் நிலப்பரப்புக்கொண்ட அத்தனை நாடுகளிலும் இருக்கிறது.

இயற்கை விதியே அப்படி?
பின் மாற்றுவது எப்படி?

முதலாவதாக பூமத்திய ரேகையில் இருந்து தூரம் அதிகமாக அதிகமாக நாட்டின் தட்பவெப்ப நிலையிலும் முரண்பாடு தோன்றுகின்றது.

தட்பவெப்ப நிலையில் முரண்பாடுகள் தோன்றுவதால் மக்கள் பழக்க வழக்கங்களிலும், நடையுடை பாவனைகளிலும் இனப்பாகுபாட்டிலும், பொருளாதார நிலைமைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழுகின்றன.

தெற்கு வடக்காக நீண்டிருக்கும் எந்த நாட்டிலும் இந்த முரண்பாடுகள் காணக்கிடக்கின்றன.

இன்பபுரியான், பி.எஸ்.சி;பி.டி.,

சின்னஞ்சிறிய பிரிட்டிஷ் தீவுகள் கூட இந்த வாதத்திற்குக் கட்டுப்பட்டு வருகின்றன.

அங்கே ஸ்காட்லாந்த் ஒரு கோடியில் அமைந்திருக்கிறது, பூமத்திய ரேகையிலிருந்து தூரம் அதிகமாவதால் இங்கிலாந்தின் இதர பகுதிகளில் வாழும் மக்களுக்கும், ஸ்காட்லாந்துக்காரர்களுக்கும் பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் நேர்ந்திருக்கின்றன. பல நூற்றாண்டுகள் முயற்சிக்கப்பட்டுங்கூட அவர்களுக்கிடையே உள்ள பிளவைக் குறைக்க முடியவில்லை.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் அப்படித்தான்! வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள தூரம் இரு பகுதிகளுக்கும் இடையே பொருளாதாரச் சூழ்நிலைகளைப்படைத்து விட்டது, அங்கே! அமெரிக்க உள்நாட்டு யுத்தம் என்பது இரு பகுதிகளுக்குமிடையேயுள்ள பிளவை ஒடுக்க முயன்றதன பலன்தான்!

இத்தாலி நாட்டில்கூட, லெம்பார்டிச் சமவெளிக்கும், அதற்குத் தெற்கேயுள்ள பகுதிகளுக்கும் உள்ள மாறுபட்ட சூழ்நிலை இன்னும் காணக்கிடக்கிறது.

எடுத்துக்காட்டாக ஐக்கிய அமெரிக்காவில் ஓர் உள்நாட்டுப் போர் மூண்டது. தெற்கே அமைதியை நிலைநாட்டுவதற்காக இராணுவம் அனுப்பப்பட்டது. ருஷ்யாவிலும் இதே பிரச்சினையைக் காணலாம். தெற்கு உக்ரைன் பிரதேசத்தை, மாஸ்கோ ஆட்சியின் கீழ் கொண்டுவந்தபோது பெரிய புரட்சியே உருவாகியது!

இதேபோல் ஐர்லாந்த், கொரியா, வியட்நாம்... எங்கேயும் இந்தச் சூழ்நிலையைக்காண்கிறோம் ... நைகீரியா சுதந்திரமடைந்திலிருந்து அதற்கும் ஏதாகிலும் ஏற்படலாமெனச் சிலர் அஞ்சுகின்றனர். 17ம் நூற்றாண்டில் வட செர்மானியர்களும் தென் செர்மானியர்களும், ஓர் முப்பதாண்டுப் போர் புரிந்தனர்! இந்தப் பிரச்சினை வெகுகாலம் வரையில் அமைதியடையவில்லை! 1866ம் ஆண்டு நடந்த புருஷியப் போருக்குப் பிறகு, 1945ல் ஆஸ்ட்ரியா சுதந்திரமடைந்த பிறகே இந்தப் பிரச்சினை தீர்ந்தது.

இதேபோன்று வடக்கு—தெற்குப் பிரச்னை இன்னும் ஏராளமான நாடுகளில் காணப்படுகின்றன. அந்த நாடுகள் இப் பிரச்னையை அவ்வளவு நன்றாக வெளிப்படுத்தாவிட்டாலும், அவைகள் இருக்கத்தான் செய்கின்றன. சங்கிலித்தொடர் போன்ற அந்த நாடுகள் பூமத்தியரேகையைத் தொடர்ந்தாற்போல், பூமத்திய ரேகைக்கும் வடதுருவத்திற்கும் இடையில் அமைந்துள்ள ஐஸ்லாண்ட், ஸ்காட்லாண்ட், ஐர்லாண்ட், இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், மொராக்கோ, கனா போன்ற நாடுகள் ஒருபுறமாகவும், ஹாலந்த், பெல்ஜியம், செர்மனி, ஸ்விட்சர்லாந்த், இத்தாலி, எகிப்து, சூடான், யுகண்டா போன்ற நாடுகள் மறுபுறமாகவும் இருக்கக் காண்கிறோம். இன்னுங் கிழக்கே, மங்கோலியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் இது காணப்படுகிறது. இது போன்ற எல்லா நாடுகளிலும் வடக்கு—தெற்கு முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

உண்மையிலேயே பூமிக்கு வடக்குப் பகுதியில் (பூமத்தியரேகைக்கு வடக்கே அமைந்துள்ள) பெரிய நாடுகள் எல்லாவற்றிலும் இந்த முரண்பாட்டைக் காண்கிறோம்... இதைப் போன்றே "கிழக்கு—மேற்கு" முரண்பாடுகளும் உலகில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் கிழக்கு—மேற்கு முரண்பாடு ஒரே நிலையானதாக. மாறாததாக இல்லை. இடத்திற்கு இடம் சூழ்நிலைக்கேற்றவாறு கிழக்கு மேற்கு முரண்பாடு மாறுபாடடைகிறது.

எடுத்துக்காட்டாக ருஷ்யா, போலாந்த், செக்கஸ்லோவேக்கியா செர்மனி, யுகோஸ்லேவியா, துருக்கி போன்ற நாடுகளில் கிழக்குப் பகுதியில் மக்கள் தொகை குறைவாகக் காணப்படுகிறது. கிழக்கிலேதான் தொழில் முன்னேற்றமும் காண்கிறோம். மேற்குப் பகுதியோ பழைமையை இன்னும் விட்டபாடில்லை. ஆனால், யு. எஸ். ஏ. கனடா, சைனா, பிரான்ஸ், ஸ்வீடன், ஸ்பெயின் போன்ற நாடுகளில் காணப்படும் நிலைமையோ தலைகீழாக இருக்கக் காண்கிறோம்... எனவே கிழக்கு மேற்கு முரண்பாடு ஒரே மாதிரியாக இல்லாமல், இடத்திற்கும் சூழ்நிலைக்குந் தக்கவாறு மாறுபாடடைகிறது. ஆனால் இந்த வடக்கு—தெற்கு முரண்பாடு மட்டும், எந்த நிலையிலும் மாறுபாடடையாது அப்படியே நிலையானதாக இருக்கக் காண்கிறோம். மேலும் இன்னும் சில நாடுகளில் இந்தக் கிழக்கு-மேற்கு முரண்பாடு இல்லாவிட்டாலும், வடக்கு—தெற்கு முரண்பாடு இருக்கத்தான் செய்கிறது! இதற்கு எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து, இத்தாலி, பர்மா போன்ற நாடுகளைக் கூறலாம். கிழக்கு—மேற்கு முரண்பாட்டு எண்ணங்கள், சில நேரங்களிலேதான் தோன்றுகின்றன; அப்படித் தோன்றினாலும், அவைகள் ஒரே நிலையானதாக, பொதுவானதாக இருப்பதில்லை. ஆனால் வடக்கு—தெற்கு முரண்பாடு அப்படிப்பட்டதல்ல! அது உலகம் முழுவதுமே நிலையானதாகக் காணப்படுகிறது!

வடக்கிற்கும் தெற்கிற்கும் இன வேறுபாடு இருக்கக் காண்கிறோம். இந்த வடக்குத் தெற்கு முரண்பாட்டு எண்ணங்கள், "மேல்—கீழ்" "பெரியது — சிறியது" "வானம்—பூமி" போன்ற கருத்துக்களடங்கியது. இதில் வேடிக்கை என்னவென்றால், நமது தேசப்படங்களிலே எல்லாங்கூட வடக்குத் திசைக்குத்தான் உயர்ந்த இடமும், தெற்குப்பகுதிக்குத் தாழ்ந்த இடமும் தரப்பட்டிருப்பதுதான்! தற்செயலாக நேர்ந்த இந்த முறைகூட இப்படி அமைந்துவிட்டது! வடக்குத் திசையைக் கீழே குறித்தும் படம் வரையலாம்; ஆனால் அப்படி வரைவது பழக்கத்தில் இல்லை. இவைகளைத் தலைகீழாகவும் வரையலாம்! ... பண்டைய ரோம், சைனா, அராபியா தேசப்படங்களில் காணப்படுவது போல் கிழக்குத்திசையை உயர வைத்தும் வரையலாம்! எல்லாப் பெரிய தேசங்களிலும் இந்த உயர்ந்த வடக்கும், தாழ்ந்த தெற்கும் காணப்படுகிறது! "வடக்கு வாழ்கிறது!" — "தெற்கு தேய்கிறது!"

எல்லாத் தேசங்களிலும், வடக்கத்தியர்கள் தங்களைத் தேசத்தின் பொறுக்கி எடுத்த அங்கத்தினர்களாகவும் திறமைமிக்கவர்களாகவும், முக்கியமானவர்களாகவும் கருதிக்கொள்கின்றனர். அதே போல் தெற்கத்தியர்களும் தங்களைப்பற்றி எண்ணிக்கொள்வதும் உண்டு. ஆனால் வடநாட்டில் வாழ்கின்ற ஓர் தெற்குநாட்டவனையும், வடநாட்டில் வாழ்கின்ற வடநாட்டவனையும் ஒப்பிட்டால், வடநாட்டவனே சக்தி மிக்கவனாகவும், முன்னேறக்கூடியவனாகவும் இருக்கக் காண்கிறோம்... சக்தியும் பலமும் வடக்கே இருக்குமானால், பண்பாட்டு அழகும் கைத்தொழில் திறனையும் தெற்கிலே காணலாம்.

"தெற்கு" வடக்கு நோக்கிப் பாய்வதும்; வடக்கு தெற்கைநோக்கிப் பாய்வதும் அடிக்கடி நிகழ்கின்றன; பலப்பல வேறுபட்ட சூழ்நிலைகளிலும் ஏற்படுகின்றன. கிழக்கு — மேற்கு முரண்பாடு அப்படித் தோன்றுவதில்லை." என்று உலக நாடுகளையெல்லாம் ஆராய்ந்து எழுதிய பிறகு, அதற்கான காரணங்களை ஆராயத் தொடங்குகிறார்.

முதன் முதலில் தட்பவெப்ப நிலைகளுக்கேற்றவாறு மக்களின் பண்பு மாறுபாடடைவதுதான் இதற்குக் காரணமாக இருக்கலாமென அவர் ஒப்புக்கொள்கிறார். வடக்கு நாடுகளின் பண்பாடு, மொழி, மொழியின் எழுத்துக்களின் உச்சரிப்பு, அந்நாட்டு மக்களின் திறமை யாவுமே மாறுபாடடைகிறது. இதைப்பற்றி ஆராயவேண்டுமென்று அவர் கூறுகிறார்.

மேலும் நேரு எழுதிய 'கண்டு பிடிக்கப்பட்ட இந்தியா'வின் யுடாங்க் எழுதிய 'சைனா நாட்டு வர்ணனை' தென்னமெரிக்க இலக்கியங்கள்... போன்ற எல்லா நூல்களும் வடக்கு—தெற்கு நிலைமைகளை வர்ணிக்கின்றன... அதே

கலையிலே உயிர்த்துடிப்பும் உருவ அழகும் இருக்கவேண்டும். இந்த இரண்டும் கலைக்கு அடிப்படையான இலட்சணங்கள். ஒருவன் தன் வாழ்க்கையிலே தன்னைச் சுற்றிலும் நிகழும் நிகழ்ச்சிகள், தன் மனத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் ஆகிய இரண்டிலும் உணர்ச்சி வசப்படலாம். ஆனால் இது கலை நுட்பம் அல்ல. இதனால் அவன் குணத்தில் வேண்டுமானால் பக்குவம் ஏற்படக்கூடும். வெளி உலகத்தில் அழகுக் குறிகளைக் காணவும் அவைகளைக் கொண்டு கலையைச் உண்டாக்கவும் நல்ல ஆராய்ச்சியும் பயிற்சியும் வேண்டும். இதை இன்று பெரும்பாலோர் உணரவில்லை.

போன்று இராமாயணம் போன்ற இலக்கியங்களிலிருந்து இன்றைய இலக்கியங்கள்வரை இது காணப்படுகிறது!

மக்களின் எண்ணங்களும், வடக்கிலிருந்து ஆரம்பித்துத் தெற்கே பூமத்தியரேகை வரை மாறுபாடடைகிறது. தட்ப-வெப்ப நிலைக்கேற்றவாறு எப்படித் தாவரங்கள் மாறுபாடடைகிறதோ, மிருகங்களின் உருவமும், பழக்க வழக்கங்களும் மாறுபாடடைகிறதோ, அதேபோல் மக்களின் பழக்க வழக்கங்களும் எண்ணங்களும் மாறுபாடடைகின்றன.

அப்படியானால் நமது தென்னிந்தியாவுக்கும் தெற்கே உள்ள இலங்கையிலும் வட இலங்கை—தென் இலங்கை முரண்பாடு காணப்படுவானேன்? வட இந்தியாவுக்கும் வடக்கே உள்ள நாடுகளிலும் இவை காணப்படுவானேன்? எனவே தட்ப-வெப்ப நிலையென்பது சிறு காரணந்தான்; இந்த முரண்பாட்டிற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன.

சென்ற ஐயாயிரமாண்டுகளாக, ஓர்வகை எண்ணங்களும் பண்பாடுகளுமுடைய மக்கள் ஓர் பகுதியிலேயும், மற்றவகை எண்ணங்களும் பண்பாடுகளும் உள்ள மக்கள் மற்றப் பகுதிகளிலும் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். இவர்கள் தங்கள் நாட்டிற்குள்ளாகச் சுற்றுப்பயணம் செய்து, தங்கள் பண்பாட்டு மக்களோடு உறவு கொள்வது போல், மற்ற நாடுகளிடம் கொள்வதில்லை. போக்கு வரவு சாதனங்கள் அதிகமாக முன்னேற்றமடைந்த தற்காலத்திலுங்கூட, மக்கள் தங்கள் நாட்டு எல்லைகளுக்குள் பயணம் செய்வது எளிதாக இருக்கிறதே ஒழிய; எல்லை கடந்து பயணம் செய்வது அவ்வளவு எளிதாக இல்லை! வடநாட்டில்வாழும் மக்கள் வடநாட்டிலேயும், தென்னாட்டில் வாழும் மக்கள் தங்கள் நாட்டு எல்லைக்குள்ளேயும் அடைபட்டுத்தான் கிடக்கின்றனர். பூமியின வடகோளத்திலே இக்காட்சியைத்தான் நாம் காண்கிறோம்.

எனவே, காந்தத்தின் ஓர்முனை மற்றொரு முனையைவிட மாறுபட்டிருப்பதால், வடக்குப் பகுதிகள் ஓர் தன்மை யுடையதாகவும் தெற்குப் பகுதிகள் வேறுபட்ட தன்மையை யுடையதாகவும் இயற்கையிலேயே அமைந்து விட்டன!

அதேபோல் பூமத்திய ரேகைக்கும் தெற்கேயுள்ள நாடுகளில் உள்ள பகுதிகளில் இதற்குத் தலைகீழான நிலைமைகள் காணப்படுவதாகவும் அவர் ஆராய்ந்து கூறுகிறார். பூமத்தியரேகைக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில், பூமத்தியரேகையை ஒட்டி வாழும் மக்கள் முன்னேற்றம் அடைந்தவர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் இருக்க முடியாது. தென் துருவத்தை நோக்கிச் செல்லச்செல்ல தெற்குஉயர்கிறது! வடக்குத்தேய்கிறது! ஆனால் மத்திய ரேகைக்குத் தெற்கே பெரும்பாலும் அதிக நாடுகள் இருக்கவில்லையே!

இவர் பற்பல நாடுகளுக்கும் சென்று ஆராய்ந்தாராய்ந்து இதைப்பற்றி எழுதியுள்ளார். இதற்காக இவருக்கு ஸ்வீடன் தேசத்து உபகாரச் சம்பளங்கூடக் கிடைத்திருக்கிறது!

அவர் கண்ட முடிவுகளைச் சுருக்கமாகக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

1. 'வடக்கு-தெற்கு' முரண்பாடு நிலையானது; மாறுபாடடையாதது; உலகம் முழுவதும் காணப்படுவது.
2. பூமத்திய ரேகைக்கு வடக்கே காணப்படும் வடக்கு-தெற்கு முரண்பாட்டிற்கு மாறுபட்ட நிலையிலே, பூமத்திய ரேகைக்குத் தெற்கே காணப்படுகிறது.
3. இந்த முரண்பாடுகளுக்கான காரணங்கள் (அ) தட்ப வெப்ப நிலை வேறுபாடுகள்; (ஆ) போக்குவரவு சாதனங்களும், பிரயாண வசதிகளும் நாட்டின் எல்லைக்கோடுகளும்; (இ) நாகரிகத்தின் வளர்ச்சி, தோற்றம் முதலியன.

''வடக்கு தெற்குப் பிரச்னை பலப்பல நாடுகளிலிருந்தும், அந்த நாடுகள் யாவும் ஒன்றாக இருக்கும்பொழுது, நம் இந்திய நாடும் ஏன் ஒன்றாக இருக்கக்கூடாது?''

இந்திய நாட்டுச் சூழ்நிலை மற்ற நாட்டுச் சூழ்நிலைகளைவிட மாறுபட்டதென்பதை விளக்கி, தென்னகம் ஏன் பிரியவேண்டும் என்பதையும் விளக்குகிறார்!

''இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாந்திற்கும் மக்களது பழக்கவழக்கங்களைப் பொறுத்த வரையில் வடக்கு தெற்குப் பிரச்னை உதயமாகியுங்கூட, ஸ்காட்லாந்த் பிரிந்து செல்லவில்லையே ஏன்?

அமெரிக்காவிலும் வடக்கு தெற்குப் பிரச்னை உள்நாட்டுப் போர்—என்கிற உச்சகட்டம்வரை சென்றாலும் இரண்டும் பிரியவில்லையே ஏன்?

காரணம் மொழிதான்! அங்கு வடக்கிலும் தெற்கிலும் ஒரே மொழி வழங்குகிறது!

ஆனால், இங்கு நம் நாட்டிலோ வேறு வேறு மொழிகள் வழங்குகின்றன!

வேறு வேறு நாகரிகங்கள் காணக் கிடக்கின்றன.

தென்னாட்டில் வழங்கும் திராவிட மொழிக் குடும்பத்தையும் வடநாட்டில் வழங்கும் ஆரிய மொழிக் குடும்பத்தையும் இணைத்து வைக்கத்தக்கதோர் ஏணி அவனியில் கிடையாதே! எனவேதான் முரண்பாடு, பிரிவினைத் திட்டம் என்கிற அளவிற்குத் தழைத்தோங்கி வளர்ந்து விட்டது!

பம்பாய் ஏடொன்றில் ஆங்கிலத்தில் இந்தக் கருத்துக்கள் வந்திருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம்! அவரது கட்டுரை, இந்நாட்டின் அரசியல் வாதிகளின் கண்களைத் திறந்து, அவர்களையும் ''இயற்கை விதி அப்படி? அதனை மாற்றுவது எப்படி?... எனவே தென்னகத்துக்கு விடுதலை வழங்குவதே சிறந்தது!'' எனக் கூறச்செய்யுமென எதிர்பார்க்கலாமா?

*

நீங்கள் செய்யும் எந்தக் குற்றத்திற்கும் சந்தர்ப்பம் சூழ்நிலை என்ற பெயரைச்சொல்லிக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்காதீர்கள். நீங்கள் செய்யும் ஆயிரம் குற்றங்களைக்கூட மற்றவர்கள் அறியாமல் இருக்கும்படி செய்துவிடலாம்; ஆனால் ஒரு சிறு குற்றத்தைக்கூட உங்களுடைய மனச்சாட்சியிடம் இருந்து மறைக்கமுடியாது. அது சாகும் வரை உங்களைக் குத்திக்கொண்டே இருக்கும்,

பொங்கல் திருநாள்

> காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றச் சார்பில் 28–1–59ல் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில் சி. என். ஏ. ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

பொங்கல் திருநாளைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால் இந்தக் கல்லூரியின் ஆரம்பகால நிலையைப்பற்றி உங்கட்கு நினைவுறுத்த ஆசைப்படுகின்றேன். இங்கு கல்லூரி ஒன்று தோன்றினால் மாணவர்கள் நிறையச் சேர்வார்களா? நல்ல தரம் கிடைக்குமா? என்றெல்லாம் ஐயப்படுவோர் அநேகர் இருந்தனர். இத்தகைய சங்கடமான நிலையில் எத்துணையோ அரிய முயற்சிகளுக்கிடையில் இந்தக் கல்லூரி தோன்றியது. இந்தக் கல்லூரி மற்றக் கல்லூரிகளையெல்லாமவிடத் தனிச் சிறப்புக்கள் கொண்டது. அச்சிறப்புக்கள் எல்லாம் இங்கு பயின்றவர்க்கே புரியும். இங்கு மாணவப் பருவத்திலேயே பிள்ளைகள் ஜனநாயக உணர்ச்சியைப் பெறமுடிகின்றது. இந்த ஜனநாயக உணர்வு மிகவும் சுவைபயக்கக்கூடியது; அதே சமயத்தில் மாணவர்கள் தவறுதற்கேற்ற சருக்கல்களையும் மிகுதியாக உடையது.

எனவே, இங்கு பயிலும் மாணவர்கள் ஜனநாயக உணர்ச்சியை நெறிதவறிப் பயன்படுத்தாது, ஈண்டுள்ள இளமையான ஆசிரியர்களிடம் நெருங்கிப் பழகி ஐயந்திரிபுகளை அகற்றித் தரமும் திறமும் பெற்று இக் கல்லூரிக்கு நல்ல பெயரெடுத்துத் தரவேண்டும். இதுவே என்னுடைய ஆசை. இந்தக் கல்லூரிக்கான உணவு விடுதி அமைவதற்காக என்னால் இயன்ற உதவியினை எப்போதும் செய்யக் காத்திருக்கின்றேன் என்பதையும் உங்களிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொன்றையும் மாணவர்களாகிய உங்களிடம் வலியுறுத்த ஆசைப்படுகின்றேன். மாணவர்கள் அரசியல் அறிவு நிறைய உடையவர்களாகத் திகழவேண்டும்; ஆனால் அரசியல் கட்சிகளோடு தொடர்புகொண்டு தீவிரமாகப் பணிபுரிதல் கூடாது. இதற்கு என் வாழ்க்கையையே நான் சான்றாகக்காட்டுவேன். நான் 3-வது ஆனர்ஸ் படிக்கும் வரையில் எத்தகைய பொதுக் கூட்டத்திற்கும் செல்வதில்லை. கல்லூரியில் நடக்கும் உரையாடல் விவாத மன்றம் சார்பாக நிகழும் கூட்டங்கட்கும் போகமாட்டேன்,

ஆனால் 3-வது ஆனர்ஸ் வகுப்பில் படிக்கும்போதுதான் லயோலாக் கல்லூரியில் நடந்த ஆங்கிலச் சொற்பொழிவுப் போட்டியில் முதன் முதலாகக் கலந்துகொண்டேன். நான இம்மாதிரி சொல்வதால் நீங்கள் அரசியல் அறிவே தேவையில்லை என்று நினைத்துவிடக் கூடாது. கனா பிரதமர் யாரென்பதற்கோ, அமெரிக்காவை ஆளும கட்சி எது என்பதற்கோ விடைதெரியாது நீங்கள் திண்டாடக்கூடாது. இன்று உலகில் உள்ள அரசியல் நிலைமையைப்பற்றி நீங்கள் நன்றாகச் சிந்திக்க வேண்டும். உங்களுக்குள் ஆராயவேண்டும். சிலைக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடே இதுதான்; சிலையைப் பார்த்து மனிதன் சிந்தனை செய்கிறான்; ஆனால் சிலைக்குச் சிந்தனை செய்யும் ஆற்றல் கிடையாது.

எனவே, சிந்தனை வேண்டும் என்று நான் சொல்வதைக்கண்டு உங்கள் சிந்தனைச் செல்வத்தை அற்பமான வழிகளில் செலவிட்டு விடாதீர்கள். இரவில் பறக்கும் ஆகாய விமானத்தின் செல்லுமிடத்தையறிய முற்படும் சிந்தனை பயனுள்ளது; ஆனால் நடுப்பகலில் பறக்கும் கருடனின் பாதையைக் காணச் சிந்தனையைச் செலவிடுதல் பயனற்ற செயலே ஆகும்.

இனிப் பொங்கல் திருநாளைப் பற்றிக் கவனிப்போம். இன்றுள்ள நூற்றுக்கணக்கான திருநாட்கள் போதாதா? பொங்கல் திருநாள் என்று ஒன்று கொண்டாடவானேன்? அதையும் தமிழர் திருநாள் என்று கொண்டாடுவதேன்? என்றெல்லாம் ஐயங்கள் எழலாம்.

தகப்பனார், பாட்டனார் தலைமுறை காலத்தில் பொங்கல் திருநாள் திருநாளாகக் கொண்டாடப்படவில்லை. அப்போதெல்லாம் சங்கராந்தியும் போகிப்பண்டிகையுமே கொண்டாடப்பட்டன. அப்போதும் இன்றுள்ள மகிழ்ச்சியே இருந்தது. ஆனால் பொங்கல் திருநாளில் நாம் அடையும் மகிழ்ச்சிக்கும் அன்றைய மகிழ்ச்சிக்கும் நிறைய வேறுபாடு உண்டு. சங்கராந்திப் பண்டிகை என்பது, ஒரு சாரார்க்கே மகிழ்ச்சியூட்டும்

பண்டிகை; அதுபோல் மகா சிவ ராத்திரி, வைகுண்ட ஏகாதசி போன்றவை ஒரு சாதியாருக்கோ ஒரு சமயத்தார்க்கோதான் இன்ப மூட்டும் விழாவாக நடந்துவருகின்றன. ஆனால் "பொங்கல் திருநாளோ" தமிழர் எல்லோராலும் கொண்டாடப்படுகின்றது. எனவே பொங்கல் திருநாள், சமயம், சாதி, குலம் என்ற கட்டுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு தேசிய சமுகப் பண்டிகை.

"பொங்கல் திருநாள்" என்பது காலஞ்சென்ற க. நமச்சிவாயம் (முதலியார்) அவர்களால்தான் முதன் முதலாகச் சைனு பஜாரில் இருந்த பச்சையப்பன் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. அது முதலாக இப் பொங்கல் புதுநாள் வீட்டிலன்றி, கல்லூரி, பொது மன்றம், ஆகிய பொதுவிடமனைத்தும், ஒரு வகுப்பாரே அன்றித் தமிழர் அனைவராலும் கட்சி, தொழில் வேறுபாடின்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பொங்கல் வாழ்த்துகளை மக்கள் தங்களுக்குள் பரிமாறிக்கொள்கின்றனர்; கலை நிகழ்ச்சிகள் நாடெங்கும் நிகழ்கின்றன. அறிஞர்கள் கூடிச் செவிக்கு இனிய விருந்தளிக்கின்றனர். இங்ஙனம் நாடெங்கும் இன்பம் பொங்குவது இந் நாளில்தான்.

இத்திருநாளைத் தமிழர்கள் எங்ஙனம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைப்பார்ப்போம். இந்நாளிலே மக்கள் நாட்டின் இறந்தகால, எதிர்கால வரலாற்றினைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். கனு நாட்டிலும், ஐஸ்லாந்திலும் இனித்தான் இலக்கியங்கள் தோன்றவேண்டும். ஆனால் நம் தமிழ்நாட்டிலே, இலக்கியத்திற்குக் குறைவில்லை. நம்முடைய கடமை அந்த இலக்கியத்திலே வேண்டாதனவற்றை நீக்கி இலக்கியத்தைச் செம்மைப்படுத்துவது தான். ஆந்திர, மலையாள, வங்காள, கன்னட, மற்றும் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள ஏனைய இலக்கியங்களெல்லாவற்றிலும் தமிழிலக்கியமே தொன்மையும் தலைமையும் வாய்ந்தது. எனவே தமிழிலக்கியத்திலுள்ள தூசுகளையும் மாசுகளையும் துடைத்து நம் இலக்கியத்தை ஈடு இணையற்றதாக ஆக்குவதே நம்முடைய கடமையாகும். இதனைச் செய்வார் இல்லையா என்றால், ஏராளமானவர்கள் உண்டு என்றே சொல்லவேண்டும். இப்பணியினைத் திறமையாகச் செய்துவிட்டால் போதாது, ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடே செய்தல் வேண்டும். சென்னைக் கடற்கரையிலும்தான் கிளிஞ்சல் இருக்கிறது; கன்னியா குமரியிலும்தான் கிளிஞ்சல் உள்ளது; சங்கு உள்ளது. சென்னை மனிதன் அவற்றைப் பொழுது போக்குக்காகப் பொறுக்கிப் பின்பு கடலிலே எறிந்துவிடுகிறான். மற்றும் சிலர் கன்னியாகுரியிலிருந்து கிளிஞ்சலைக் காசு கொடுத்து வாங்கி வந்து கண்ணாடிப் பேழையில் வைத்து அழகு பார்க்கின்றனர். ஆனால் கன்னியாகுமரியில் வாழ்பவனோ சங்கினை அறுத்து வளையலாக்கி அதனை எழிலும் பயனும் உடைய விலையுள்ள பொருளாக்குகிறான். அதுபோலத் தமிழ் இலக்கியத்திலுள்ள பெருமைகளை மட்டும் பேசிக்கொள்வதில் பயனில்லை. சங்கினின்று அருமையான வளையல்களை அறுத்தெடுப்பதுபோல் தமிழிலக்கியத்திலுள்ள தேவையற்ற நூல்களைக் களைந்து தமிழிலக்கியத்தைச் செம்மைப் படுத்தி வேற்றவரெல்லாம் வியந்திடும் வண்ணம் செய்வதே பெருமைபடக்கூடிய செயலாகும்.

பழம் பெருமை பேசித்திரிவதும் நல்லதல்ல. புறாவையும் காற்றாடியையும் உயரப் பறக்கவிடுவதில் நாமடையும் வியப்பும், அறிவும், சந்திரமண்டலந்தாண்டிச் சென்ற சோவியத் ராக்கட்டைப்பற்றி நினைக்கையில் உண்டாகின்றதில்லையே. அயலவர் கேலி, உழைப்பு, சிந்தனை, பலமுறை தோற்றல் ஆகியவற்றுக்கெல்லாம் சலியாது முயன்ற விஞ்ஞானியின் தளராத மனப்பான்மையைத் தமிழர்கள் அறிந்து பின்பற்றுதல் வேண்டும். அலட்சிய மனப்பான்மையை விட்டொழித்து, ஆராய்ச்சி நோக்கத்தோடு தமிழ் இலக்கியத்தினைப் புனிதப்படுத்தித் தமிழ் நாட்டை வளப்படுத்தவேண்டிய அறிவும் ஆயுளும் பெற்று நற்பெயருடன் வாழ்வீராக என்று உங்களை வாழ்த்தி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

பொங்கல் விழா, கல்லூரித் தலைவர் திரு. கே. சி. கோவிந்தராசனார், எம். ஏ., அவர்களின் தலைமையுரையுடனும், திரு. சஞ்சீவி, எம்.ஏ., அவர்களின் நன்றி கூறலுடனும் இனிது முடிவுற்றது.

★

சிதம்பரத்தில் 21-2-59 சனிக்கிழமை

சி. என். அண்ணாதுரை

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

மற்றும் கழக முன்னணி வீரர்கள், திரைப்பட நடிகர்கள்

நடிக்கும்

"சந்திரமோகன்"

நாடகம் நடைபெறும்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

அண்ணாமலை நகர்.

"தீர்மானம் போடேன்!"

— பழநி —

குணக் குன்றே! கோமானே! அரசாள வந்தவா! ஏழை குடிப்பிறந்தவா! எம் துயர் அறிவாய்! அதனைப் போக்கிட வழி தருவாய்! — என்று கெஞ்சிக் கேட்டிடலாம் என்கிற ஆசையாலோ என்னவோ, சென்னையில் இந்தக்கிழமை கூடிய என். ஜி. ஓக்கள், தமது மாநாட்டினைத் துவக்கி வைக்க 'கனம்' காமராஜரை அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

இலண்டனிலே படித்து, இலங்காஷயர் துணியைப்போட்டு, அயர்லாந்திலேயிருந்து 'கேக்' வரவழைத்து, ஏழெடுக்கு மாளிகையிலே இருந்தபடி சுவைத்துவிட்டு ஏப்பம் விடும் இனத்தவரல்ல காமராஜர்! ஏழைகளோடு பழகியவர், ஏழைகளின் கஷ்டங்களை அறிந்திடும் தகுதி கொண்டவர், கொடி தூக்கியவர், மக்களை அறிந்தவர் என்பதால், ஏனையவர்களைக் காட்டிலும் அவருக்கு எல்லோருடைய 'கண்ணீரும்' புரிந்திடக் கூடியசக்தி உண்டு என்று பொதுவாகக் கருதப்படுகிறது! அதனால்தான்போலும், ஆண்டு பலவாகத் தங்கள் குறைகளைக் கூறிவரும் என். ஜி. ஓ.க்கள் இவரை அழைத்துச் சென்றிருக்கிறார்கள் இந்த ஆண்டு!!

'கனம்' சென்றார் — கண்ணீர் வடிப்போரின் மாநாட்டிலேகலந்துகொண்டார் — என். ஜி. ஓ. சங்க சென்னைத் தலைவர் ஆழ்வாரப்பன் என்பாரைப் பேசச் சொன்னார்— குறைகளை அறியத்தான் முதலமைச்சர் பேசச் சொல்கிறார் என்று அவரும் பேசினார்-கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர், ஆத்திரத்தோடு, இடைமறித்துச் சொன்னாராம், தீர்மானம் போடுங்களேன் என்று! எதற்குத்தெரியுமா? அண்மையில் ஐந்து ரூபாய் உயர்த்தியிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது! "இந்த அறிவிப்பை என் மனைவியிடம் சொன்னேன். ஐந்து ரூபாய் சம்பளம் அதிகம் கிடைக்கப்போகிறது, என்றேன்! அவள், செச்சே இதுதானா? இதற்குத்தானா, வாய் வலிக்க, கத்திக்கொண்டே வருகிறீர்கள்! இந்த ஐந்து ரூபாயால் என்ன கஷ்டம் தீர்ந்துவிடப் போகிறதாம்!!" என்றாள், என்றிருக்கிறார், ஆழ்வாரப்பன். உடனே, அருகிருந்த முதலமைச்சர், பேசும்போது நாம் பதில் சொல்வோமே என்றுகூட நினைக்காமல், "ஓகோ! அஞ்சு ரூபாயும் வேண்டாம்னு தீர்மானம் போடேன்!!" என்று கூறியிருக்கிறார்.

ஐந்து ரூபாயும் வேண்டாம் என்று தீர்மானம் போடேன்! — என்கிறார் காமராஜர். ஏழை மக்கள் போடும்

அரங்கண்ணல்

இதுபோன்ற தீர்மானங்களில், முதலமைச்சர் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்பது ஒருபுறமிருக்க, அவருடைய குரலிலே தொனித்துள்ள கேலியினைக் காணும்போதுதான், நமக்கு ஆச்சரியமும் அருவருப்பும் ஏற்படுகிறது!!

*

காலை 9 மணிக்கு ஆபீசுக்குச் சென்று, 5 மணிக்குத் திரும்பி, மாதந்தோறும் கிடைக்கும் அறுபதையும் எழுபதையும் வைத்துக் கொண்டு, மாதத்தில் பத்து நாட்கள்வரை செலவழித்துவிட்டு, மீதம் இருபது நாட்களையும் எங்கே கடன் கிடைக்கும், எந்தக் கடைக்காரன் பணம் கேட்காமல் சாமான்கள் தருவான் என்று திரிந்து, நடுவில் திடீரெனக் குழந்தைக்கு மருந்தோ, கொண்டவளுக்கு வியாதியோ வந்துவிட்டால் ஓடாத இடமெலாம் ஓடி, வாழ்க்கையில் எவ்வித நிம்மதியுமின்றித் தப்புவழியில் சென்றிடினும்கூடப் பரவாயில்லை, பணம் கிடைக்குமா என்று வழியை மாற்றி, மாட்டிக் கொண்டால் வேலைபோய், எப்போதும் தொல்லையுடன் சாகாமல்செத்துக் கொண்டிருக்கும் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த, என். ஜி. ஓ.க்கள், கண்ணீரைக் காட்டுகிறார்கள் கனத்திடம்! தந்தையின் இடத்திலிருந்து பொறுப்புடன் பதில் சொல்லவேண்டிய அவரோ வீதியில் சண்டைபோடும் சிறுவர்கள் அளவுக்குத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு, "ஓகோ! வாங்கமாட்டேன்னு தீர்மானம் போடேன்" என்கிறார்!!

கவனிக்கிறோம். பார்க்கிறோம்— வழிகண்டுபிடிக்கிறோம் — சூ, சூ அப்படியா — அவசியம் செய்ய வேண்டியதுதான்--இப்படி ஆதரவான பதிலைச் சொல்லலாம்— வழக்கமான "ஆகட்டும் பார்க்கலாம்" என்பதையாவது எடுத்துப்போட்டிருக்கலாம்! எழவு வீட்டிற்குப்போனால், நமக்கு அனுதாபமிருந்தாலும் இல்லாவிட்டாலும், துக்கத்தில் பங்குகொள்ளுவதும், அழுவோரின் கண்ணீரைத் துடைப்பதும்தான் மனிதாபிமானம் கொண்டோர் செயல். ஏழைகள் சங்கம்வைத்திருப்பதும்

மாநாடு கூட்டுவதும், தங்கள் குறைகளைச் சொல்லி அழுவே ஒழிய, டின்னரும் டீபார்ட்டியும் நடத்த அல்ல; பூமாலையும் டான்சுக் கச்சேரியும் வைக்க அல்ல; தத்தமது கண்ணீரைக் காட்டி, அதற்கான பரிகாரங்களைத் தேடிக்கொள்ளவே என். ஜி. ஓ-க்கள் போன்றோர் சங்கம் வைத்திருக்கிறார்கள். அங்கு போன முதலமைச்சர், அனுதாபத்தைக் காட்டவில்லை, ஆதரவான வார்த்தையைச் சொல்லவில்லை, அரச பரம்பரையிலேயே வந்தவர் போலவும் பரம்பரை பரம்பரையாக அதே இடத்திலேயே உட்கார்ந்திருக்கப்போகிறவர் போலவும், கேலி செய்திருக்கிறார்! 'வேண்டாம்னு, தீர்மானம்போடேன்' என்று சுடச்சுட வீசியிருக்கிறார் சொல்லை!!

அரசியல் ஒன்றைத் தவிர, வேறு எந்த வழியிலும், அவர்களைவிட உயர்ந்தவரில்லை காமராஜர். படிப்புக்கும் பரீட்சைக்குமென, அவர்கள் பட்டபாடெல்லாம் அறியார்! கல்லூரிக்குச் சம்பளம் கட்டுவதற்குப்பட்டபாடும், பட்டம் பெற்றதும் வேலை கிடைத்து நிம்மதியாக இருக்கலாம் என்று கட்டிய கோட்டைகளையும். கண்ணீரால் கழுவிக் கொண்டிருக்கிறவர்கள் என். ஜி. ஓ.க்கள். ஜனநாயகத்தின் காரணமாக தர்பாரில் அமரும் பாக்கியம் பெற்றவர், காமராஜர். எனினும் இப்படி வீசியிருக்கிறார் சொல்லை! வெந்த புண்ணிலே வேல் வீசுவதுபோல!!

✱

என். ஜி. ஓ.க்களுக்கு இப்போது உயர்த்தியிருப்பதாகக் கூறப்படும் ஐந்து ரூபாயும், அமைச்சர் சுபபிரமணியத்தின கூற்றுப்படி, 'இடைக்கால நிவாரணம்' தான். அதுமட்டுமின்றி, இதையும் கூட்டிப் பார்த்தால், மொத்தம் என். ஜி. ஓக்களுக்கு 39-ரூபாய் ஆகும்! அதே சமயத்தில், மத்திய சர்க்காரில் இதே வேலையைச் செய்யும் ஒருவர் என்ன பெறுகிறார் தெரியுமா? ரூபாய் 50!!

சம்பளமும் சரி, பஞ்சப்படியும் சரி, மத்திய சர்க்கார் அளவுக்கு இல்லை! ஆனால், இரண்டு இடத்திலுமிருப்போருடைய வேலையிலும் தரத்திலும் எவ்வித வித்தியாசமுமில்லை!!—இந்த, மேடு பள்ளம் ஏன் என்று பொறுப்புணர்ந்தோர், எல்லாம் கேட்டு வருகிறார்கள்.

என். ஜி. ஓ.க்கள் விஷயத்தில் மட்டுமல்ல, ஏனைய அதிகாரிகள் விஷயத்திலும கூட, இந்தப் பிளவு இருக்கிறது. என்பதை இதோ ஒருவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"சங்கத்துக்குச் சந்தாத்தொகையைக் கொடுக்கக்கூடத்தெற்கிலுள்ள பலர்சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள்! அந்தளவுக்குத் தெற்கே, மிகமிகக் குறைவான சம்பளம் தரப்பட்டு வருகிறது. பார்லிமெண்டு மெம்பர்களாகவும், மந்திரிகளாகவும் ஆனால்தான், இந்தக் கஷ்டம் தீரும் போலிருக்கிறது"

இந்திய என்சினியர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் கே. எல். ராவ் என்பார் முதல் தேதி சென்னையில் பேசியிருக்கிறார் இவ்விதம். என்சினியர்கள் என்போர், ஓரளவுக்கு வருவாயும் வசதியும் பெறக்கூடியவர்கள் என்று கருதப்பட்டு வருகிறது. இந்திய உபகண்டத்திலே தெற்கிலுள்ள என்சினியர்களே திறமைசாலிகள் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அந்தத் திறமைசாலிகளுக்கு, ஏனைய பகுதிகளைக் காட்டினும், இங்கே, சந்தாக்கூடக் கட்ட முடியாதளவுக்குக் குறைவான சம்பளம் தரப்படுகிறதென்கிறார்!

என் ஜி.ஒ.க்கள் நிலையும் இதுதான் —என்சினியர்கள் நிலையும் இப்படித்தான் — விவசாயிகளுடைய ஆண்டு வருமானமும் ஏனைய இடங்களைவிட இங்கு குறைவுதான் — தொழிலாளியின் தின வருமானமும் கொஞ்சம் தான், என்றால், அந்த நாட்டின் ஆட்சியைப்பற்றி என்ன சொல்லுவது!!

இவர்கள் எல்லாம் நன்றாக வாழ்ந்து, நல்ல சம்பளம் பெற்று, வசதியோடு இருப்பதைத்தான், தற்கால பொருளாதாரப்படி, நல்ல பூமி என்கிறார்கள்.

தெற்கு, 'நல்ல பூமி'யாக இல்லை — தெற்கைவிட, வடக்கில் மத்தியதர வர்க்கமும் ஓரளவு அதிக ஊதியம் பெறுகிறது—தொழிலாளியும் சம்பாதிக்கிறான்—உழவனும் அதிகவருவாய் பெறுகிறான். ஒரே நாடு என்கிறார்கள்! ஆனால், வடக்கைவிடத் தெற்கில், 'எல்லாம் மோசம்' என்கிறார்கள் அறிஞர்கள்!!

என்ன காரணம் இதற்கு?—முதலமைச்சருக்குப் புரியக்கூடிய உதாரணத்தையே காட்டலாம்! ஏரி நிறையத்தண்ணீரை நிரப்பி, அத்தண்ணீரைப் பக்கத்து ஊருக்குத் திருப்பிவிட்டால், ஏரியுள்ள ஊர்க்காரனுக்கு எப்படித் தண்ணீர் கிடைக்கும்!!

இங்கிருந்து ஆண்டொன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள், வடக்கே போய்க்கொண்டிருக்கின்றன.

சுங்கவரி
கலால்வரி
வருமானவரி
தபால்தந்தி
இரயில்

இப்படி எத்தனையெத்தனையோ துறைகளில். டில்லிக்கு நாம் அழுது கொண்டிருக்கிறோம்! இந்தப் பணத்தையெல்லாம் நாமே பெற்று, நிர்வாகத்திலே போட்டால், என்னென்ன நன்மைகளைப் பெறலாம்!

இதனைத்தான், நாம் சொல்லி வருகிறோம்!—பதில் தரமாட்டார், கனம்! வீரராவார், வெண்கலக்குரல் எடுத்து, மூன்று நிமிடத்தில், ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும், இரத்தினச் சுருக்கமாக "இந்தத் தி. மு. க. இருக்கிறதே, அண்ணாதுரை கட்சி—அது திட்டமில்லாத தட்சி! மகாஜனங்களே! முனிசிபல் எலெக்ஷன் வருகிறது. மாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள். ஜே, இந்த்! என்று முழக்கமிட்டுவிடுகிறார். மூன்று பத்திரியில், ஏடுகளும், கொட்டை கொட்டையாகப் போட்டுவிடுகின்றன—தி.மு.க. வுக்குச் சவுக்கடி என்று!,

✱

நமக்குச் சவுக்கடிதான் தரட்டும், துப்பாக்கிக் குண்டுகள்தான் கொடுக்கட்டும், மக்களுக்கு நன்மைகள் செய்யக்கூடாதா! செய்ய முடியவில்லை என்றால், அனுதாப வார்த்தையாவது வழங்கக்கூடாதா!!

மாணவர்களானாலும்சரி, ஆசிரியர்களானாலும்சரி, தொழிலாளியானாலும்சரி, சர்க்கார் ஊழியர்களானாலும்சரி, எவர் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னாலும், உடனே இந்தக் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு கட்சிவாடை, வீசுகிறதாகவே கருத்தில் படுகிறது! சம்பளம் போதவில்லையென்றாலும் கட்சிவாடை, சங்கடங்களைச் சொன்னாலும் கட்சிவாடை, இருமினாலும் கட்சிவாடை, தும்மினாலும் கட்சிவாடை, அடிக்கிறது இவர்களுக்கு!

"ஆகா! அடிக்கிறது கட்சி வாடை. தொனிக்கிறது, கட்சி வாடை. தூ! தூ! மாட்டோம் — ஒப்பமாட்டோம்" என்று ஓங்காரக்கூச்சலிட ஆரம்பிக்கிறார்கள்.

எந்தக் குறைகளை யார் சொன்னாலும், உடனே கட்சிகளின் நினைவுதான், 'கனம்'களின் கவனத்தில் வருகிறதே ஒழிய,

நியாயமா என்பதை உணரவே தவறு கிருர்கள்.

என். ஜி. ஓ. சங்கத்தில் பேசிய முதலமைச்சர்சொன்னுராம்'இப்படிக் குறைகளைச் சொன்னுல், கூடியிருக்கிற ஜனங்கள் 'அப்ளாஸ்' கொடுப்பார்கள் என்று பேசிவிடக்கூடாது', என்று. ஆழ்வாரப்பன் பேசியபோது, கூடியிருந்த 4000 என். ஜி. ஓ.க்களும் கைதட்டியிருக்கிருர்கள் போலிருக்கிறது! கனத்துக்கு அது பொறுக்கவில்லை!! தன்னைப்போல் பேசாமல் 'அப்ளாஸ்' வாங்கும்படி பேசுகிற கூட்டம் வளர்கிறதே, என்று சொரிந்திருக்கிருர் கனலே.

''சர்க்காரைத் தாக்கினுல் 'அப்ளாஸ்' கிடைக்கும்! அப்படியே பேசுவோம் என்பது கட்சிகளின் செயல்! அதைப்போல, நீங்களும் நடந்துகொள்ளக் கூடாது!'' எனும் அரிய உபதேசத்தைசெய்திருக்கிருர். அதோ பாரீர் எங்களால் ஏற்பட்ட சுகத்தை, இதோ வளம் கொஞ்சுவதைக்காணீர், அந்த நன்மை எங்களால் ஏற்பட்டது, இந்த மலர்ச்சிக்குக்காரணம் நாங்கள் என்று இப்படி, விளக்கங்கள் தந்து, இப்படியிருந்தும் சர்க்காருடைய குறைகளை மட்டும் சொல்லுவது சரியல்ல என்ருல் எவரும் ஒப்ப வேண்டியதுதான்.

''கஷ்டப்படுகிறேம், கஷ்டப்படுகிறேம் என்கிறீர்களே! நீங்கள் மட்டும்தாஞ கஷ்டப்படுகிறீர்கள்? எல்லோரும்தான் கஷ்டப்படுகிருர்கள். தினசரி உழைத்துவிட்டு நாளொன்றுக்கு 12 அணு வாங்கும் தொழிலாளியும்தான் கஷ்டப்படுகிருன். வரியை வாங்கி, உங்களுக்குப் பங்குபோட்டுக் கொடுத்துவிட்டால், அவர்களையெல்லாம் கவனிக்கிறது யார்? மக்களுக்கெல்லாம் வசதிகள் செய்துதரப் பணம் வேண்டாமா? உங்களுக்குக் கொடுத்துவிட்டால் போதுமா!!''

என்றும் கேட்டிருக்கிருர். வரியையெல்லாம் வாங்கி, எங்களுக்கு விநியோகம் செய்துகொடு, இந்த ஏஜண்டு வேலையைப்பார் என்று எந்த என் ஜி. ஓ.வும் கேட்கவில்லை. எனினும்'கனம்' ஏழைகளையும் தொழிலாளர்களையும் கவனத்துக்குக் கொண்டுவந்து, உங்களுக்கே சம்பளத்தை உயர்த்தினுல் அவர்களுக்கெல்லாம் யார் நன்மைகளைச்செய்வது? அவர்களையெல்லாம் நான் கவனிக்கவேண்டாமா, அவர்கள் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்கிருர்கள் பாருங்கள் என்று வர்ணித்திருக்கிருர். குறைகளைச் சொல்லச் சொல்ல, இந்த ஆழ்வாரப்பனுக்கு 'அப்ளாஸ்' கொடுத்தார்களே, நாமும் மக்களின் கஷ்டங்களை வருணிப்போம், நாலு 'அப்ளாஸ்' வாங்கிக்கொள்வோம் என்ற அர்த்தத்தில் பேசினுர் என்று நாம் சொல்ல வரவில்லை! குறைகளையே கூறுவதுதான் எதிர்க் கட்சிகளின் வேலையாக இருக்கிறது என்று கூறிய முதல்வரே அங்கு நாட்டிலுள்ள குறைகளை, எடுத்துச் சொல்லியிருக்கிருர்!!

நாள் பூராவும் உழைத்துவிட்டு 12 அணுதான் கூலி பெறுகிருனும் தொழிலாளி!—மறுப்பாரில்லை.

உழைத்தும் போதிய ஊதியம் பெருத நிலையில் ஒரு தொழிலாளி இருக்கிருன் என்ருல் அது யாருடைய தவறு? மக்கள் எல்லோரும்தான் கஷ்டப்படுகிருர்கள்! அந்தக் கஷ்டத்தைப் போக்கத்தானே, அரசு இருக்கிறது? அரசாஞம் மகிபரும் அவருடைய கட்சியும் என்ன செய்தது!!

துறைமுகத்திலே பாடுபடும் தொழிலாளியும், காமராஜர் கூறுவது போலத்தானே கூறி, கூலி உயர்வு கேட்டான். என்ன செய்தார் அவனுக்கு? கருங்காலிகளைக் கொண்டுவந்து நுழைத்து, அவர்களை வேலையற்றவர்களாக்கப் பார்த்தார்! அதைத் தடுத்தபோது, துப்பாக்கியால் சுட்டு, தர்பார் நடத்திஞர்!! அந்த இலட்சணத்தை அறியாமலா இருக்கிருர்கள், மக்கள்? என். ஜி. ஓ.க்கள் கேட்டால், மக்களைக் காட்டுவதும், மக்கள் கேட்டால் கட்சிகளைக் காட்டுவதும், கட்சிகள் கேட்டால் துப்பாக்கிகளைக் காட்டுவதுமாகத் துரைத்தனம் நடாத்திக்கொண்டிருக்கும் 'கனம்' வரிகளை வாங்கி, அதைக்கொண்டு கட்டுச் செட்டாக ஆட்சி நடத்துகிருராம்! சொல்கிருர்!!

கட்டுச் செட்டாக ஆட்சி நடாத்தும் அழகு தெரியாதா நமக்கு? ஆண்டொன்றுக்கு ஒரு கவர்னருக்கு மட்டும் எத்தனை இலட்ச ரூபாய்களைக் கொட்டிக் கொட்டிக் கொடுக்கிறேம்! எதற்கு அந்தக் கவர்னர்? எத்தனை இலட்ச ரூபாய்களை வருகிற வெளிநாட்டுக்காரர்களுக்கும், டில்லி மந்திரிகளின் பாதுகாப்புக்குமென்று அழிக்கிறேம்! எதற்கு இந்தச் செலவு? எத்தனை ரூபாய்களை அமைச்சர்களின் பயணத்துக்கும், டில்லிக்குப் போய் வரவும் கொட்டுகிறேம்! தேவையா இந்தச் செலவு?

''கவர்னரைக் கண்டிக்கிருர்கள் தி.மு.கக்கள். அவர் பேச வரும்போது, சட்டசபைக்கு வராமல் பகிஷ்கரிக்கிருர்கள். ஏன்? எப்போதுமே வராமலிருக்கிறதுதானே!'' என்று கேலிபேசத் தெரிகிறது, அந்தக் கவர்னருக்காக அழிக்கும் இலட்சங்களை எடுத்து, என் .ஜி. ஓக்களுக்குக் கொடுக்கலாம் என்கிற எண்ணம் வரலாமல்லவா! எத்திப் பிழைக்கவும், தத்திக் குதிக்கவும், தென்றை பாடவும் டில்லியை நோக்கி துந்திஞை மீட்டவும், கேலி பேசவும், கிண்டல் செய்யவும் தெரிகிறது — தீர்மானம் போடேன் என்கிருர், அலட்சியத்தோடு!!

இன்றில்லாவிடினும் ஒரு நாளைக்கு, இவர்களைப்பற்றி என்ன தீர்மானம் போடலாம் என்கிற கட்டத்துக்கு வந்துகொண்டுதானிருக்கிருர்கள் மக்கள். ஒரு நாளைக்கு, கடைசித் தீர்மானமும் செய்யத்தான் போகிருர்கள். முன்னுக்குப் பின் முரணுகவும், அதிக எம்.எல்.ஏ-க்களை வைத்திருக்கிறேம், நம்மை யார் என்ன செய்யமுடியும் என்கிற தைரியத்திலும், எதிர்க்கட்சிகளானுலும், இளைத்த ஏழைகளானுலும், என்.ஜி.ஓக்களானுலும், தொழிலாளர்களானுலும், இளக்காரமாகத் தெரியலாம் அமைச்சருக்கு! எதுவேண்டுமானுலும் பேசலாம்!! மறந்துவிடக் கூடாது, ஏழையின் உள்ளம் எரிமலை என்கிற உண்மையையும், அந்த எரிமலையின் கட்டத்துக்கு இந்த நாட்டிலுள்ள மக்கள் படிப்படியாகப் போய்க்கொண்டிருக்கிருர்கள் என்கிற உண்மையையும் என்று மட்டும், 'கனத்' துக்குக் கவனமூட்டுகிறேம். பசித்த வயிறு, பெரும் புயல்! அந்தப் புயலுக்கு முன் பெரிய பெரிய அரசுகள் எல்லாம் பொடிப் பொடியாகின்றன!!

★

தான் மாத்திரம் வாழ முற்படுவது விலங்கு. பிறரும் வாழவேண்டும், அப்போதுதான் பிறரோடு வாழமுடியும் என்பதைக் கண்டவன் மனிதன். இதனுல் பிறருடைய நல்வாழ்வுக்கு உகந்ததைச் செய்வதே கடமையாகிறது. ஆனுல் இக்கடமையைச் செய்யும்போது, அந்த அளவுக்கு தன்னுடைய இன்பம் என்ற எண்ணமும், தான் என்றஎண்ணமும் மறையவேண்டியிருக்கிறது. இது அவ்வளவு எளிதில்லை. ஆனுல் ஒவ்வொருவனும் இந்த வகையில் தன்னலத்தைக் குறைக்க முற்பட்டால், சமுதாயத்தின் பொதுநலம் ஓங்குகிறது இதனுல் முடிவில் சமுதாயத்தின் ஓர் உறுப்பாக நிற்கும் தனி மனிதனும், தான் தனித்து நின்று பெறக்கூடிய நலத்தினும் அதிகமான நன்மையைப் பெறுகிருன்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

காலத்திய காங்கிரஸ் ஆட்சியின் சரித்திர ஏட்டைப் புரட்டிப் பார்த்தோமேயானால், பக்கத்திற்குப் பக்கம் இரத்தம் உறையும் இந்த சம்பவங்களைதான் சந்திப்போம். இவைகளையெல்லாம் வார்த்தை ஜாலங்களிலே மறைக்கப் பார்க்கிருர் நேரு.

இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலேயர்களின் இரும்புபிடியிலிருந்த இந்திய உபகண்டம் விடுதலை பெற்ற பெருநாளன்று, நேரு கர்ஜித்தார், "இந்த நாட்டில் தொழில்களெல்லாம் தேசியமயமாக்கப்படும், தேனும் பாலும் தெருவெல்லாம் பெருக்கெடுத்தோடும்" என்று. கதராடை அணிந்த கனதனவான்களெல்லாம் கூறினர்கள், "ஆகா பார்த்தீர்களா, பாரத புத்திரர்களின் தலைமகன் நேரு கூறியுள்ள வாசகங்களை... இந்த நாட்டின் தனிப்பட்ட முதலாளிகளுக்கு இனித் தலைவலிதான். முதலாளிகளெல்லாம் கூண்டோடு ஒழிக்கப்படுவர்; தொழிலாளர்களின் கூட்டாட்சி மலரப்போகிறதென்று. ஆனல் பத்தாண்டு காலம் பறந்தும், இறவாமல்தானிருக்கிறது முதலாளித்துவம், இந்நாட்டில்! பம்பாயிலும், கல்கத்தாவிலும், கோவையிலும், கேரளத்திலும் எழும் புகை மண்டலமெல்லாம் முதலாளிகளின் பெருமைகளைத்தான் பறைசாற்றுகின்றன!!

கல்கத்தாவில் கிடைக்கும் நிலக்கரியை எடுக்கவும், பம்பாயில் நெசவு செய்யவும் டாட்டாக்களும், பிர்லாக்களும், பஜாஜுகளும் தான் இன்றும் இருக்கிருர்களே தவிர, அவர்களெல்லாம் ஒழிக்கப்படவில்லை; அதற்கு மாருக அடுக்கடுக்காக எழில் மாளிகைஎழுப்பிய வண்ணம்தான் இருக்கிருர்கள். தீப்பெட்டி — அப்பளம் -- செருப்புப் போன்ற சில்லறைத் தொழில்களைத்தான் இந்த அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறதே தவிர, பெரும் பெரும் தொழில்கள் இன்றும், இன்னும் முதலாளிகளின் இரும்புப்பிடியிலேதானிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துத் தான் வருகிறது நேரு அரசாங்கம். அதுமாத்திரமல்ல; இந்த நாட்டு முதலாளிகளுக்குப் பல்லாயிரக்கணக்கானேரின் வாழ்வைப் பணயம் வைத்ததோடு விடவில்லை. வெளிநாட்டுக்கு வேறு அடகு வைத்திருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரில் துவக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பெரும்பான்மை தொழில்களெல்லாம் வெளிநாட்டு மூலாதாரத்தில் துவக்கப்பட்டுள்ளவைகள். அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளிலுள்ள முதலாளிகளின் மூலதனம் வரவேற்கப்படுகிறது! உள்நாட்டு முதலாளிகள் ஒரு பக்கமும், வெளிநாட்டு முதலாளிகள் மறுபக்கமும் இந்நாட்டு மக்களின வாழ்வைப் பறிக்கும் திட்டத்தைதான் டில்லிப் பேரரசு தீட்டி வருகிறது!!

முதலாளிகள் வளர்ந்த வண்ணமே இருக்கிருர்கள்; தொழிலாளர்கள் தேய்ந்து கொண்டே போகிருர்கள்!!

தேர்தல் காலத்திலே முதலாளிகளின் கதவுகளைத் தட்டித் தட்டி பிச்சை எடுக்கும் காங்கிரசார், முதலாளிகளைத் தட்டிக் கொடுப்பதிலே ஆச்சரியமில்லை.

ஆலை அரசர்களும், மிராசுதாரர்களும், கொட்டித்தந்த பணத்திலே 'ஓட்டு' வேட்டையாடினவர்கள், முதலாளித்துவத்திற்கு வேட்டுவைக்க எப்படி முன்வருவார்கள்! அவர்களின் தயவு தேவைப்படுகிறதே, தேர்தல் காலத்தில்! ஆகவேதான் இந்நாட்டில் தனிப்பட்டோரின் மூலதனத்தால் துவக்கப்பட்ட தொழிற்கூடங்களெல்லாம் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இவைகளை, மூடி மறைக்கத்தான் அடிக்கடி ஏதாவது ஒரு வெத்து வேட்டை வீசிவைக்கிருர் நேரு. அதுவும் மக்களின் ஆரவாரம், காணும்போது இப்படியொரு வெடிகுண்டை வீசுவார்; அவர், ரோஜா மாலைகளை மக்கள் மீது வீசுவதைப்போல! அவர் பேசுவது காற்றிலே மிதந்து, மிதந்து தேய்ந்து விடுகிறதல்லவா; அதைப்போலவே அவரின் எண்ணங்களும் தேய்ந்துவிடுகின்றன! சிந்துகின்ற முத்துகள் இரண்டொருநாள் பத்திரிகைகளுக்கு செய்திகளாகக் கிடைக்கிறதே தவிர, அது செயல்படுத்தப்படுவதில்லை. நேரு பேசுவதுவேறு! செய்வதோ வேறுதான்! அதைத்தான் இந்த, பத்தாண்டுக்கால ஆட்சி நமக்குப் படம்பித்துக் காட்டுகின்றது!!

★

காஞ்சியில் கலைவிழா!

காஞ்சிபுரம் கா. மு. சுப்பராயனர் பள்ளி உதவி நிதிக்காகக் காஞ்சி பொழுதுபோக்குக் கழகத்தினரால் "வாழ்—வாழவிடு" என்ற சமூக சீர்திருத்த நாடகம், காஞ்சி நகராட்சி மன்றத்துக்கெதிரில் உள்ள திறந்தவெளி அரங்கில் 1—2—59ல் சிறப்பாக நடைபெற்றது.

நாடகத்தில் பங்கேற்று நடித்தவர்களில் பெரும்பாலோர் கல்லூரி ஆசிரியர்களாவார்கள். நாடகத்துறையில் நல்ல பயிற்சியோ அனுபவமோ இல்லாதவர்கள் என்று சொல்லமுடியாத அளவுக்கு மிகவும் திறமையாக நடித்து நல்ல பெயர் வாங்கிவிட்டார்கள்.

நாடகத்தின் மூலம் வருலான தொகையில் செலவு போகக் கிட்டத்தட்ட எழுநூறு வெண் பொற்காசுகள் மேற்படி பள்ளிக்கு உதவி நிதியாகக் கிடைத்திருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.